
பக்கங்கள்:-31

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 12 | வியாழக்கிழமை | 24.04.2025 | அதிர்வு 263

## டொன் பிரியசாத் கொலை: இருவருக்குப் பயணத்தடை!



சமூக மற்றும் அரசியல்

06



# ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி மிக விரைவில் கைது!



## அவர் முக்கிய அரசியல் பிரமுகர் என்கிறது அநுர தரப்பு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பிரதான சூத்திதாரி மிக விரைவில் கைது செய்யப்படுவார் என்றும், அவர் முக்கிய அரசியல் பிரமுகர் என்றும் அநுர அரசின் உயர் மட்டத் தரப்பில் இருந்து அறியமுடிகின்றது.

அத்துடன் அந்தப் பிரதான சூத்திரதாரிக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது.

06

# முஸ்லிம்களிடம் ஜனாதிபதி மன்னிப்புக் கோர வேண்டும்

## நிஸாம் காரியப்பர் எம்.பி. வலியுறுத்து

"பயங்கரவாதத்தடைச்சட்டத்தைஒருநாளும் பயன்படுத்த மாட்டேன் என்று சொல்லிய அநுர குமாரதிஸாநாயக்கமுதன்முதலில்எங்களுக்கு எதிராகவே பயன்படுத்தினார். ஆதலால் அவர் முஸ்லிம்களிடம் மன்னிப்பு கோர வேண்டும்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனையில்பிரதேச சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து அட்டாளைச்சேனை சந்தை சதுக்கத்தில் இடம்பெற்ற பிரச்சாரக் கூட்டத்தில்

06






சிறைத் துறைக்கு பொறுப்பான பிரதி அமைச்சராகத் தாம் இருந்த காலகட்டத்தில் – 2021 செப்டம்பர் 12ஆம் திகதி – இருட்டும் மம்மல் நேரத்தில் போதையின் மயக்கத்தில் திடீரென ஹெலிக்கொப்டரில் போய் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு அருகில் இறங்கி, அங்கு சிறையில் இருந்த பத்துத் தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளிட வைத்து, அவர்களின் தலையில் துப்பாக்கியை வைத்துக் கொலை செய்யப் போகிறார் என மிரட்டிய லொஹான் ரத்வத்தை அதற்கான நீதிவான் நீதிமன்ற விசாரணையை இன்று எதிர்கொள்கிறார்.

அநுராதபுரம் நீதிமன்றத்தில் இன்று அந்த வழக்கு விசாரணைக்கு வருகிறது.

இந்த விடயத்தில் பாதிக்கப்பட்ட பத்துத் தமிழ் அரசியல் கைதிகளில் இருவர் இன்று விசாரணையின் போது சாட்சியம் அளிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நீதிமன்றம் எல்லா வழக்குகளிலும் கண்ணை மூடிக்கொண்டு இருக்கும் என்று கருதுவதற்கு இல்லை.

06

# மாத்தறை சிறைக்கைதிகள் வேறு சிறைகளுக்கு மாற்றம்

மாத்தறை சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து அங்கிருந்த கைதிகள் வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றப்படுள்ளனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இதுவரை 250 இற்கும் மேற்பட்ட சிறைக்கைதிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

மாத்தறை சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரண்டு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் தொடர்ந்ததால், பொலிஸார் கண்ணீர்ப் புகைத் தாக்குதல் மேற்கொண்டு மோதலைக் கட்டுப்படுத்தினர்.

இதையடுத்து சிறைச்சாலைக்கு விசேட அதிரடிப் படையினர் வரவழைக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இதுவரை 2 ஆயிரத்து 298 முறைப்பாடுகள்

2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இதுவரை மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி 2 ஆயிரத்து 298 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 11 முறைப்பாடுகளும், தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 2 ஆயிரத்து 116 முறைப்பாடுகளும், ஏனைய விடங்கள் தொடர்பில் 171 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.



# மீண்டும் குறைந்தது முட்டையின் விலை!

சந்தையில் முட்டையின் விலை குறைவடைந்துள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, ஒரு முட்டை 23 ரூபா முதல் 29 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

சித்திரைப் புத்தாண்டு காலத்தில் முட்டை ஒன்று 47 ரூபா முதல் 50 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டது.

ஆனால், தற்போது சந்தையில் முட்டை விலை குறைவடைந்துள்ளது என்று வியாபாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.





# ஜம்மு - காஷ்மீர் தாக்குதலுக்கு சஜித் கண்டனம்

"அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிரான வன்முறை மனித குலத்திற்கு எதிரான ஒரு மிகப்பெரிய குற்றமாகும். பயங்கரவாதத்திற்கு எதிராக நாம் எப்போதும் ஒற்றுமையாக நிற்க வேண்டும்." – என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஜம்மு – காஷ்மீரில் சுற்றுலாப்பயணிகள் மீது பயங்கர வாதிகளால் சாரமாரியான துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதில் சுமார் 20 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதல்களுக் குக் கண்டனம் வெளியிட்டு எதிர்க்கட்சி தலைவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"ஜம்மு ரூ காஷ்மீரில் நடந்த கோழைத்தனமான பயங்கர வாதத் தாக்குதலை நான் வன்மையாகக் கண்டிக்கின் றேன். அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிரான வன்முறை மனித குலத்திற்கு எதிரான ஒரு மிகப்பெரிய குற்றமாகும்.

பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பத்தினர் மற் றும் இந்திய மக்களுடன் நாங்கள் ஒற்றுமையாக நிற்கின் றோம். பயங்கரவாதத்திற்கு எதிராக நாம் எப்போதும் ஒற்றுமையாக நிற்க வேண்டும்." – என்றார்.



# ரணிலை மீண்டும் ஜனாதிபதியாக்க தயாராகுவோம்!

## ராஜித அறைகூவல்

தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது எனவும், ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே இந்த நாட்டை மீட்க முடியும் எனவும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனா ரத்ன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரச்சாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

"வருட இறுதியாக்கும்போது தற்போதைய அரசால் தாக்குப் பிடிக்க முடியாத நிலை ஏற்படும். 4 வருடங்களில் தேர்தலுக் குச் செல்வார்களாம். அது பொய். தற்போதைய அரசுக்குப் பயணிக்க முடியாது. தேர்தலுக்கு முன்னரே அரசு மாறக்கூடும்." – எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

"ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே நாட்டை மீட்க முடியும். சவாலை ஏற்கக்கூடிய தலைவர் அவர் மட்டுமே. எனவே, ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்குத் தயாராகுவோம்." – எனவும் ராஜித சேனாரத்ன அறைகூவல் விடுத்தார்.

# மகசின் சிறைச்சாலைக்குள் வீசப்பட்ட பொதிகளில் பல்வேறு பொருள்கள் மீட்பு



கொழும்பு மகசின் சிறைச்சாலைக்குள் வீசப்பட்ட பொதிக ளிலிருந்து கையடக்கத் தொலைபேசிகள் உட்பட பல்வேறு பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்று சிறைச்சாலை அதிகா ரிகள் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

இனந்தெரியாத நபர்கள் சிலர் கடந்த 20 ஆம் திகதி இரவு கொழும்பு மகசின் சிறைச்சாலையின் கூரை வழியாக சிறைச் சாலைக்குள் இரண்டு பொதிகளை வீசி சென்றுள்ளனர்.

இதனை அவதானித்த சிறைச்சாலை அதிகாரிகள் குறித்த பொதிகளைச் சோதனையிட்டனர்.

இதன்போது, இந்தப் பொதிகளிலிருந்து 2 கையடக்கத் தொலைபேசிகள், 5 டோடா கேபிள்கள், 10 போதை மாத்தி ரைகள் மற்றும் புகையிலை மற்றும் ஐஸ் போதைப்பொருள் என்பன சிறைச்சாலை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள் ளன.

இது தொடர்பில் பொரளைப் பொலிஸார் மற்றும் சிறைச் சாலை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர்.

# மூளையில் கிருமித் தொற்று; குடும்பஸ்தர் உயிரிழப்பு

(எஸ்.ரகுதீஸ்)

மூளையில் ஏற்பட்ட கிருமித் தொற்று காரணமாக இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்த சம்பவம் குடவத்தை, துன்னாலைப் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த மணியம் ஜெகதீஸ்வரன் (வயது 34) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்

மேற்படி குடும்பத்தார் திடீர் உடல்நல குறைவு காரணமாக நேற்று புதன்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையை கொண்டு சென்ற போது அவர் அங்கு உயிரிழந்துள்ளார்.

பிரதேச பரிசோதனையில் மூளையில் ஏற்பட்ட கிருமித் தொற்று காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.



இந்த மரணம் தொடர்பில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் விசாரணைகள் மேற்கொண்டார். சாட்சிகளை நெல்லியடிப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.



# அமைச்சர்களுக்கு வழங்கப்படும் வாகன எண்ணிக்கை குறைப்பு



அமைச்சர்களுக்கு வழங்கப்படும் வாகனங்களின் எண்ணிக்கையை இரண்டாக மட்டுப்படுத்தி சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலாளரால் இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதனிடையே அமைச்சர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருளுக்கான ஒதுக்கீடு 700 லீற்றர் வரை குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் அமைச்சர்களுக்கு 3 வாகனங்கள் வழங்கப்பட்டதுடன், 2,250 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவின் வரி விதிப்பு சர்ச்சை பேச்சுகளில் தீர்வுக்கு முன்னேற்றம்!

## கோடி காட்டுகின்றார் ஜனாதிபதி அநுரகுமார



சமீபத்தில் விதிக்கப்பட்ட வரிகள் குறித்து அமெரிக்காவுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் “பயனுள்ளவையாக” இருந்தன எனவும், அதன் விளைவுகள் விரைவில் ஒரு கூட்டு அறிக்கையில் முறையாக வெளியிடப்படும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அறிவித்தார்.

இரத்தினபுரியில் நடந்த அரசியல் பேரணியில் உரையாற்றும் போதே அவர் இந்த கருத்துக்களை தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் முன்னர் அறிவித்த வரிக் கட்டணங்கள் குறித்து பேச்சு நடத்தும் நோக்கில், இலங்கைப் பிரதிநிதிகள் குழுவிற்கும் அமெரிக்க வர்த்தக பிரதிநிதி ஜேமிசன் கிரீருக்கும் இடையே செவ்வாய்க்கிழமை வொஷிங்டனில் நடைபெற்ற சந்திப்பைத் தொடர்ந்து இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

பொருளாதார மேம்பாட்டு துணை அமைச்சர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ, அமெரிக்க வர்த்தக பிரதிநிதியுடனான கடிதப் பரிமாற்றத்தைத் தொடர்ந்து இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டு, இந்த சந்திப்பை உறுதிப்படுத்தினார். இலங்கை பிரதிநிதிகள் குழுவில் வெளியுறவு, வர்த்தகம் மற்றும் நிதி அமைச்சகங்களின் மூத்த அதிகாரிகள் இருந்தனர்.

பேச்சுவார்த்தைகளின் உள்ளடக்கம் அல்லது எதிர்பார்க்கப்படும் நிவாரணத்தின் தன்மை குறித்து அரசாங்கம் இன்னும் விரிவாகக் கூறவில்லை, ஆனால் வரவிருக்கும் கூட்டு அறிக்கை முன்னோக்கி செல்லும் வழியை தெளிவுபடுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது எனக் கூறப்பட்டது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதற்கு முன்னர் பல வழக்குகளில் லொஹான் ரத்வத்தை தப்பி பிழைத்தார் எனினும் இந்த வழக்கில் அந்த அதிர்ஷ்டம் கை கொடுக்குமா என்பது தெரியவில்லை.

இந்த முரட்டுச் சம்பவம் நடப்பதற்கு சரியாக 20 வருடங்களுக்கு முன்னர் இளைஞராக இவரும், இவர் சகோதரர் சானுஹா ரத்வத்தை, தந்தையார் அனுருத்த ரத்வத்தை ஆகியோரும் சம்பந்தப்பட்ட இன்னொரு வழக்கு இலங்கையில் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

லொஹான் ரத்வத்தையின் தந்தையார் அனுருத்த ரத்வத்தை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சித்தப்பா முறையானவர். சந்திரிகாவின் தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு அனுருத்த ரத்வத்தை மைத்துனர். அதனால் சிறிமாவோ பிரதமராக இருந்த காலத்தில் இராணுவத் தொண்டர் படை மூலம் லெப்டினனட் கேணலாக பதவியுயர்த்தப்பட்டார் அனுருத்த ரத்வத்தை. பின்னர் அரசியலுக்கு நுழைந்த அனுருத்த ரத்வத்தை சந்திரிகாவின் காலத்தில் இலங்கையின் பாதுகாப்புத் துறை பிரதி அமைச்சராக இருந்தவர். விடுதலை புலிகளுக்கு எதிரான யுத்தத்தை அப்போது முன்னின்று நடத்தியவர். அவ்வேளையில் முழு ஜெனரலாகத் தம்மைத் தரமுயர்த்திக் கொண்டவர். கண்டி மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட்ட அவர் பல சமயங்களில் தேர்தல் குளறுபடிகளில் சிக்கியவர். பாதுகாப்பு அமைச்சரான தந்தையின் வலது கரமாக அந்த நேரத்தில் அந்த அடாவடித்தனங்களை பண்ணுவதில் முன் நின்றவர்கள் மகன்மாரான இந்த லொஹானும் சானுஹவும்.

2000ஆம் ஆண்டு தேர்தலிலும் தேர்தல் குளறுபடிகளில் இந்த ரத்வத்தை குடும்பம் சம்பந்தப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. அதன் தொடர்ச்சியாக மோசமான சம்பவம் 2001 டிசம்பர் 5ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது உடத்தலவின்ன பகுதியில் இடம்பெற்றது.

கண்டியில் கட்டுகஸ்தோட்டைப் பகுதியில் அளிக்கப்பட்ட வாக்குகளின் பெட்டிகளோடு அதிகாரிகள் கண்டியில் உள்ள வாக்குகள் எண்ணும் நிலையத்துக்கு விரைந்து கொண்டிருந்தனர். வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்ட வாக்குப் பெட்டிகளுக்கு பாதுகாப்பாகவும் கண்காணிப்பாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின்பதினொருஇளைஞர்கள்கொண்ட அணி ஒரு வானில் தொடர்ந்து சென்றது. (அது, அனுருத்த ரத்வத்தைக்கு எதிரணியில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் போட்டியிட்ட மாவட்டம்). திடீரென குறுக்கே வந்தது எனக் கருதப்படும் படையினரின் ஒரு வாகனம் அந்த வானை முட்டி அதை மின் கம்பத்துடன் மோத வைத்தது. மின்கம்பத்தில் மோதி நின்றவானத்தில்இருந்தவர்களைநோக்கி கண்மண் தெரியாமல் இயந்திரத் துப்பாக்கிகள் கனன்றன. வாகனத்தில் வந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தரப்பின் பத்து இளைஞர்களும் அந்த இடத்திலேயே கொலையுண்டனர் – ஒருவரைத் தவிர.

அந்தத் தேர்தல் முடிவுகளப்படி பதவியேற்றரணில்விக்ரமசிங்கஅரசுஅனுருத்த ரத்வத்தை, மகன்மார் லொஹான் ரத்வத்தை, சானுஹ ரத்வத்தை ஆகியோர் உட்பட பலருக்கு எதிராக கொலை வழக்குத் தொடர்ந்தது.

இந்தக் கொடூரம் அரங்கேறிய இடத்தின் பெயரை ஒட்டி, இது 'உடத்தலவின்ன கொலை வழக்கு' என அழைக்கப்பட்டது. 'ட்ரயல் அட் பார்' முறையில் விசாரணைகள் நடைபெற்றன.

ஆனால் கொலைச் சம்பவத்தை நேரில் கண்ட ஒருவரைத் தவிர, எவரும் உயிரோடு இருக்காத காரணத்தினால் மூன்று ரத்வத்தைகள் உட்பட முக்கியமானவர்கள் பலரும் 2006 இல் விடுவிக்கப்பட்டனர். ஆயினும் அனுருத்த ரத்வத்தையின் மெய்க்காவலர்களான பாதுகாப்பு படையினர் ஐவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா நூறு வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் தப்பி பிழைத்த ஒரே ஒரு கண் கண்ட சாட்சியான மூஹம்மது மாலிக் இந்தச் சம்பவத்தில் மூன்று ரத்வத்தைகளும் நேரடியாக சம்பந்தப்பட்டனர் என்பதைத் தெளிவாகச் சாட்சியத்தில் குறிப்பிடவில்லை என்று நீதிபதிகள் தமது தீர்ப்பில் தெரிவித்தனர்.

25 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற மிக மோசமான குற்றச் சம்பவத்தில் தப்பி பிழைத்த லொஹான் ரத்வத்தை இப்போதும் தப்பிப் பிழைப்பாரா என்பதை அநுராதபுரம் நீதிமன்றம்தான் கூற வேண்டும்.

பாதிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் பெரும்பாலும் இப்போது விடுதலையாகிவிட்டனர். அவர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், சட்டத்தரணி கேசவன் சயந்தனும் இன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகி தங்கள் தரப்பு சாட்சியங்களை நெறிப்படுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## டொன் பிரியசாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயற்பாட்டாளர் டொன் பிரியசாத் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் வெல்லம்பிட்டி பொலிஸார் நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் தகவல்களை முன்வைத்தனர்.

இந்தக் கொலைச் சம்பவத்தில் பந்துல பியால் மற்றும் மாதவ சுதர்சன எனும் தந்தை, மகன் இருவர் மீதும் விசாரணைகளின்போது சந்தேகம் எழுந்துள்ளது என்று பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, மேற்படி இருவரின் வெளிநாட்டுப் பயணங்களைத் தடை செய்யவும், அவர்களின் தொலைபேசி அழைப்புக்களைப் பதிவு செய்யவும் உத்தரவிடுமாறு பொலிஸார் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தனர்.

இந்தக் கோரிக்கையை ஏற்று, இருவரும் நாட்டைவிட்டு வெளியே செல்வதைத் தடுக்கும் வகையில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துக்குக் கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுணவல உத்தரவிட்டார்.

மேலும், சுட்டுக்கொலை செய்யப்பட்ட டொன் பிரியசாத்தின் சகோதரரான திலின பிரியசாத் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் வெட்டிக் கொலை செய்யப்பட்டார் எனவும், அதனுடன் தொடர்புடைய வழக்கு விசாரணைகள் இன்னும் நீதிமன்றத்தில் குறித்த தந்தை மகனுக்கு எதிராக நடைபெற்று வருகின்றன எனவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதுவரை 10 பேரிடம் சாட்சியமங்கள் பெறப்பட்டுள்ளன எனவும், மேலதிக விசாரணைகள் தொடரும் எனவும் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, டொன் பிரியசாத் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்த கஞ்சிப்பான இம்ரானின் சகாக்கள் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈஸ்டர் தாக்குதலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தக் கைது நடவடிக்கைக்கு எதிராக தென்னிலங்கையில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டால் பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படைகளைக் கொண்டு அவற்றைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அறியமுடிகின்றது.

நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றவே 2019 ஆம் ஆண்டில் ஒரு தரப்பால் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கடந்த சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம்களிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கலந்துக்கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அக்கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளருமான எம.எஸ். உதுமாலெப்பை தலைமையில் நடைபெற்ற இந்தப் பிரச்சாரக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிரேஷ்ட சட்டத்தரணி நிஸாம் காரியப்பரும் கலந்துகொண்டார்.

நிஸாம் காரியப்பர் எம்.பி. இங்கு உரையாற்றுகையில்,

"உள்ளூராட்சி சபைத் தேர்தல் நாடாளுமன்றத் தேர்தலை விடவும் அப்பாற்பட்டது என்பதை மறந்து விடக் கூடாது. நாட்டின் ஜனாதிபதி முக்கியமாக தமிழ் பேசும் மக்கள் உள்ள உள்ளூராட்சி சபைகளில் குறிப்பாக அக்கரைப்பற்று, சம்மாந்துறை பிரதேசங்களுக்கு வருகை தந்து பிரதேச சபைகளின் அதிகாரிகளை என்னிடம் தாருங்கள் என்று தவித்துக் கொண்டு கேட்கின்றார். அது முக்கியமான விடமாகும்.

இன்றுநாடாளுமன்றத்தில்இருக்கின்ற அதிகாரத்தை விடவும், ஜனாதிபதிக்கு இருக்கின்ற அதிகாரத்தை விடவும் உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகாரங்கள் இருக்கின்றதென்று கூறினால், என்ன நிஸாம் காரியப்பர் கதைப்பதென்று நினைப்பீர்கள். அதுதான் உண்மையாகும்.

நாடாளுமன்றத்தில் பிரதேச அபிவிருத்தி நிதி இருக்கின்றதா என்றால் கிடையாது. எங்களுக்கு மட்டுமல்ல, யாருக்கும் கிடையாது.

அரசில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தங்களின் ஊர்களில் உள்ள வீதிகளைத் திருத்துவதற்கு ஐந்து சதமும் கிடையாது. அது அவர்களின் கொள்கையாகும்.

ஜனாதிபதி அவருடைய நிதியை மஹிந்த ராஜபக்ஷ செய்த மாதிரி நிதி ஒதுக்கீடு செய்வதற்கும் முடியாது. அது அவர்களின் கொள்கை. அந்தக் கொள்கைக்கு அவர்கள் சிறைக் கைதிகள் போலாகிவிட்டார்கள். அதைவிட்டு அவர்கள் வெளிவர முடியாது. இதை இந்த ஐந்து வருடமும் செய்ய முடியாது.

ஆதலால், இருக்கின்ற ஒரே இடம் உள்ளூராட்சி சபைகள்தான். உள்ளூராட்சி சபைகளுக்குத்தான் தங்கள் மக்களின் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய அதிகாரம் இருக்கின்றது.

இன்று இலங்கையில் மூன்று உள்ளூராட்சி சபைகளின்

07

# கருணா, பிள்ளையான் மக்களைக் கொன்ற பெரும் குற்றவாளிகள்!

## அவர்களுக்கு அரசியலில் பதவிகள் வழங்கப்பட்டமை தவறு என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரி சுட்டிக்காட்டு

"விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்தபோது பெரும் குற்றம் இழைத்த கருணா, பிள்ளையான் போன்றவர்களுக்கு அரசியலில் பதவிகள் வழங்கப்பட்டமை தவறான முடிவாகும்." – என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துடன் பிள்ளையானைத் தொடர்புபடுத்துவதற்கு முற்படுகின்றனர் என வெளியாகும் தகவல் தொடர்பில் நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த மைத்திரிபால சிறிசேன கூறியவை வருமாறு,

"அது பற்றி எனக்கு எதுவும் கூற முடியாது. விசாரணைகளை முன்னெடுக்கும் சி.ஐ.டியினர் மற்றும் புலனாய்வுப் பிரிவுக்கே அது பற்றி தெரிந்திருக்கக்கூடும். எனக்கு இது பற்றி தகவல்கள் தெரியவரவில்லை.

பிள்ளையான் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்தவர். அவ்வமைப்பில் இருந்து அவர் வெளியேறி அரசாங்கத்துடன் இணைந்தபோது நான் அமைச்சுப் பதவி வழங்கவில்லை. அப்படிபட்ட ஒருவருக்கு எப்படி பதவி வழங்கப்பட்டது என வழங்கியவரிடம் கேளுங்கள்.

அவ்வாறு பதவி வழங்கப்பட்டமை தவறாகும். விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேறி கருணாவும், பிள்ளையானும் இராணுவத்துடன் இணைந்தனர். போரை முடிப்பதற்கு இது உதவியாக அமைந்திருக்கக்கூடும்.

அம்பாறையில் பிக்குகளைக் கொலை செய்தது யார்? இது அனைவருக்கும் தெரியும். எனவே, நபர்கள் யார் என்ற தகவலை எனது வாயில் இருந்து எடுக்க முற்படவேண்டும். விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்தபோது கருணா, பிள்ளையான் மக்களைக் கொன்று குற்றம் இழைத்தனர்." – என்றார்.

# ஜம்மு காஷ்மீர் தாக்குதலால் வருத்தமடைகின்றேன்: நாமல்

ஜம்மு காஷ்மீரின் பஹல்கம் பகுதியில் நடத்தப்பட்ட கொடூரமான தாக்குதலால் தாம் வருத்தமடைவதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தமது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

ஒரு பிராந்தியமாகப் பயங்கரவாதத்தை சகல வடிவங்களிலும் எதிர்ப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து முயற்சிகளை விரைவுபடுத்த வேண்டும் எனவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் ஜம்மு காஷ்மீரின் பஹல்கம் பகுதியில் சுற்றுலாப் பயணிகள்மீது பயங்கரவாதிகளால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில், சுமார் 26 பேர் உயிரிழந்தனர். 10 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

## முஸ்லிம்களிடம்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அதிகாரங்களைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றார்கள். முதலாவது கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்தைத் தேசிய மக்கள் சக்தி பெற்றுக்கொள்ளுமா அல்லது ஐக்கிய மக்கள் சக்தி பெற்றுக்கொள்ளுமா என்பதாகும். இரண்டாவது யாழ்ப்பாணம் மாநகர சபையின் அதிகாரத்தை யார் பெற்றுக்கொள்வது. மூன்றாவது அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினரின் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் அதிகாரத்தை அமோக வெற்றியுடன் தக்கவைத்துக் கொள்வீர்களா என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

வெற்றி கொள்ளாவிட்டால் 40 வருடங்களின் பின்னர் பெற்றுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினரை இனிமேல் பெற்றுக்கொள்ள முடியாதென்று சொல்லத் தொடங்குவார்கள்.

இப்போது நாட்டில் தேசிய மக்கள் சக்தி அரசுக்குப் பாரிய சவால் ஏற்பட்டுள்ளது. ஸ்டிக்கர் ஒட்டிய ருஸ்தியை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதற்கு அவரின் பெற்றோர்கள் நன்றி தெரிவித்ததாகச் சொன்னார்கள்.

இப்படிப் பொய்யான வாதங்களை முன்வைக்கின்ற அரசாக மாறியிருப்பது எனக்கே புதினமாக இருக்கின்றது. அமெரிக்காவின் ஆதரவுடன் இஸ்ரேல் பலஸ்தீனை தாக்கியது. ஒரு நாள் மாத்திரம் 400 பெண்கள் உயர் இழந்தார்கள்.

இதையிட்டு இந்த அரசு ஓர் அனுதாபப் பிரேரணையாவது கொண்டு வந்தார்களா? நாங்கள் நாடாளுமன்றத்தில் அனுதாபப் பிரேரணை கொண்டு போக இருக்கின்றோம்.

இதற்கு ஆட்சியாளர்களின் ஆதரவையும் கோருவோம். பலஸ்தீன் தாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் இதற்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி ஓர் ஆர்ப்பாட்டம் செய்ததா என்று கேட்கின்றேன்.

இவர்களினால் இதைச் செய்ய முடியாது. இஸ்ரேலுக்கு எதிராக ஸ்டிக்கர் ஒட்டியவரைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்தீர்களே. உங்களுக்கு வெட்கமில்லையா?

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒரு நாளும் பயன்படுத்த மாட்டேன் என்று சொல்லிய அநுரகுமார திஸாநாயக்க முதன் முதலில் எங்களுக்கு எதிராகவே பயன்படுத்தினார். ஆதலால், அவர் முஸ்லிம்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும்.

இதன் பின்னர் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு காரணமானவர்களை பிடிக்கப் போகின்றேன் என்று சொல்லிவிட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னும் இதற்காக பாவிக்கப்படவில்லை. நான்கு வருடங்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட அறிக்கையை இப்போது சி.ஐ.டியிடம் கொடுத்துள்ளார்.

ஜனாதிபதியாகி ஏழு மாதங்களகியுள்ள நிலையில் இந்த அறிக்கையை அப்போதே கொடுத்து இருந்தால், இப்போது நடவடிக்கை எடுத்திருக்கலாம் அல்லவா.

ஈஸ்டர் தாக்குதல்தாரிகளைக் கைது செய்வேன் என்று பெரிதாகப் பேசியவர், ஒன்றும் செய்ய முடியாமல் சி.ஐ.டியிடம் கொடுத்துள்ளார். இதை அவர் தெரியாமல் செய்யவில்லை. தெரிந்து கொண்டுதான் செய்கின்றார்.

அவர் கொடுக்கமாட்டார். இன்றைய அரசு அமெரிக்காவின் கைப்பிள்ளை. ஐ.எம்.எப். சலுகை அமெரிக்காவின் கைகளில் இருக்கின்றது.

அமெரிக்காவுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் தங்களுக்கு எதுவும் நடக்கலாம் என்ற பயத்தில் அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாக மாறியுள்ளார்.

இதனால்தான் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் முஸ்லிம் இளைஞரைக் கைது செய்வதற்கு ஜனாதிபதி கையொப்பம் வைக்கின்றார். ஐரோப்பிய பிரதிநிதிகளின் ஒரு குழு ஜி.எஸ்.பி. கொடுப்பது பற்றி ஆராய்வதற்கு ஒரு குழு இலங்கை வரவுள்ளது.

அமெரிக்காவுக்குக் கூஜா பிடித்தால் அமெரிக்கா புதிதாக விதித்துள்ள வரியை விதிக்க மாட்டாதென்று நினைக்கின்றார். இவரைக் கணக்கெடுக்கவில்லை. 83 வீதம் வரி விதிக்கப்பட்டுள்ளது. இப்போது அது 90 நாட்களுக்கு நிறுத்தப் பட்டுள்ளது.

ஆகவே, அட்டாளைச்சேனை மக்கள் எங்கள் கைகளைப் பலப்படுத்த வேண்டும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் யாருக்கும் பயந்து அடங்கிப் போவதில்லை." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## திருந்தாத பொலிஸ்!

இலங்கைப் பொலிஸ் துறைக்காக வக்காலத்து வாங்கியிருக்கின்றார் தமிழர் பிரதேசத்தின் சார்பில் நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி உறுப்பினராக அங்கம் வகிக்கும் ம.ஜெகதீஸ்வரன். ஆளும் தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அவர். ஆளும் கட்சி உறுப்பினர் என்ற முறையில் பொலிஸ் துறையைப் பாதுகாத்து வக்காலத்து வாங்க வேண்டியது அவரது கடமையும் பொறுப்பும்தான். ஆனாலும் தமிழ் மக்கள் விடயத்தில் அந்த விவகாரத்தைக் கையாள்வதில் மதிநுட்பமும் கவனிப்பும் நேர்மையும் அவசியமானவை என்பதை அவருக்குச் சொல்லி வைக்க விரும்புகிறோம்.

தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் ஆரம்பத்தில் முளைவிட்டபோது, அதன் அதீத வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தது சிறிலங்கா பொலிஸ் துறையின் அடாவடித்தனமும் அராஜகமும்தான் என்பதை அவர் அறிந்திருப்பார்.

மக்களின் பொலிஸாக இல்லாமல், சிங்களத்தின் - பேரினவாதத்தின் - மேலாதிக்கத்தின் - மேலாண்மைப் போக்கின் - கருவியாகவும் ஏவல் படையாகவும் பொலிஸ் செயற்பட்டமையால்தான் தமிழர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையே வந்தது என்பதை அவர் மறந்து விடக்கூடாது.

பொது மக்களின் பாதுகாப்புக்காகவே பொலிஸார் உள்ளனர் என்பது பொதுவான தத்துவம். இந்த நாட்டில் ஆளும் தரப்பினரின் அதிகாரப் பிரயோகத்திற்கான - அடாவடித்தனத்திற்கான - கருவியாக மட்டுமே பொலிஸ் துறை செயற்பட்டு வருகிறது என்பதுதான் தமிழ் மக்களின் கடந்த கால அனுபவம்.

இலங்கைப் பொலிஸ் தங்களின் பாதுகாவலர் அல்லர், சிங்கள மேலாதிக்கத்தின் ஏவல் நாய்கள் என்றுதான் தமிழ் மக்கள் கருதும் நிலையில் பொலிஸ் துறை நடந்து வந்தது, நடந்து வருகிறது என்பது மூடி மறைக்கப்பட்ட விவகாரம் அல்ல.

பொலிஸ், மக்களின் நண்பன் அல்லன், அதிகாரத்தின் ஏவல் நாய்கள், தமிழ் மக்களின் காவலர்கள் அல்லர், தமிழ மக்கள் மீது அதிகாரத் தரப்பினால் பாய விடப்பட்ட - ஏவி விடப்பட்ட - கருவிகள் என்பதுதான் தமிழ் மக்களின் கருத்து நிலை. பட்டறிவு.

தமிழ் மக்கள் உணர்வுபூர்வமாக தமது தாயகத்தில் செய்யும் ஒவ்வொரு நடவடிக்கையும் சட்டத்தின் பெயரால் தலையிட்டுக் குழப்பும் அட்டூழியத் தரப்பாகத்தான் தமிழர் தாயகத்தில் பொலிஸ் துறை உள்ளது.

இப்போதும் கூட மட்டக்களப்பில் அன்னை பூபதியின் நினைவேந்தலைத் தடை செய்யக்கோரி நீதிமன்றத்தில் மனுச் செய்த அராஜக - அடாவடி - பொலிஸ் இது.

அஹிம்சை வழியில் போராடிய அன்னை பூபதியை நினைவேந்துவதை புலிகள் இயக்கத்தை மீளுயிர்ப்பு செய்யும் நடவடிக்கையாக அர்த்தப்படுத்தும் வேலையை ஜனாதிபதி அநுரா குமார திஸநாயக்க கூட சந்தேகமாகக் கொண்டிருக்க மாட்டார். ஆனால் இலங்கை பொலிஸ் அப்படித்தான் நடந்து கொண்டது.

அதற்காக இன்று பொலிஸுக்காகக் குரல் எழுப்பும் ஜெகதீஸ்வரன் எம்.பியோ அவர் சார்ந்த தரப்புகளோ இன்னும் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை.

பொலிஸ் தரப்பு மக்கள் காவலர்களாக மாறாமல், அடாவடி ஏவல் நாய்களாக, ஆக்கிரமிப்புப் படைகளாகச் செயல்படும் வரை இந்த நாட்டில் நல்லிணக்கம், புரிந்துணர்வு என்பன ஏற்படப் போவதில்லை.

ஜெகதீஸ்வரன் எம்.பி. தான் சார்ந்த கட்சியின் தலைமையிடம் - அரசுத் தலைமையிடம் - பொலிஸ் துறையை நேர்சீராக்கி, மறுசீரமைத்து, முற்று முழுதாக மாற்றியமைக்கும் நடவடிக்கை பற்றி பேசி, அது பற்றிக் காத்திரமான முன்நகர்வுகளை முன்னெடுப்பதுதான் பொருத்தமானது- தமிழ் மக்களிடம் வந்து பொலிஸ் துறை குறித்து விளக்கம், வியாக்கியானம் கூறுவதை விடுத்து.

முதலில் தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமைக்கு எதிராக அடாவடித்தனம், அராஜகம் பண்ணும் பொலிஸ் துறையை கட்டுப்படுத்தி, ஒழுங்கு முறையான காவல் துறையாக மாற்றுவது பற்றி ஜெகதீஸ்வரனும் அவர் அணியினரும் சிந்திப்பதுதான் பொருத்தமானது. மக்களின் காவலர்கள் என்ற கருத்தை மறந்து பேரினவாதத்தினதும் ஆட்சியாளர்களினதும் ஏவல் நாய்கள் என்ற கருத்தில் பொலிஸார் செயற்படும் வரை இந்த நாட்டில் நல்லிணக்கம் உருப்படப் போவதில்லை.



# பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதல்: உயிரிழந்தோருக்கு அமித் ஷா அஞ்சலி

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் உடல்களுக்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியுள்ளார். மேலும், உயிரிழந்தவர்களின் உறவினர்களைச் சந்தித்து ஆறுதல் கூறியுள்ளார்.

ஜம்முகாஷ்மீரின்பஹல்காமில்நேற்று முன்தினம் நடந்த பயங்கரவாத தாக்குதலில் 26 பேர் உயிரிழந்துள்ளனர். சுற்றுலா சென்றவர்கள் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு முன்பாக அவர்களின் மதம் குறித்து கேட்டு பின்னர் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். குஜராத், கர்நாடகா உள்பட பல மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இந்த தாக்குதலில் உயிரிழந்துள்ளனர். தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் உட்பட பலர் காயமடைந்துள்ளனர்.

லஷ்கர்-இ-தொய்பாவின் கிளை அமைப்பான ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட் இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளதாக கூறப்படுகிறது. இந்த சம்பவம் உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உலக நாடுகளின் தலைவர்கள் தொடங்கி பொதுமக்கள் வரை அனைவரும் இந்த சம்பவத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்த தாக்குதலை அடுத்து உள்துறை அமைச்சர் அமித் ஷா நேற்று முன்தினம் ஸ்ரீநகர் விரைந்தார். ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, முதல்வர் உமர் அப்துல்லா, சிஆர்பிஎஃப் டிஜி, ஜம்மு காஷ்மீர் டிஜி, ராணுவ அதிகாரிகள் ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார்.

உயிரிழந்த 26 பேரின் உடல்கள் மீட்கப்பட்டு ஸ்ரீநகரில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. உயிரிழந்தவர்களுக்கு அமித் ஷா மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். இதையடுத்து, அங்கு கூடி இருந்த உயிரிழந்தவர்களின் உறவினர்களை அமித் ஷா சந்தித்தார். அவர்கள் கதறி அழுதபடி அமித் ஷாவிடம் முறையிட்டனர். அவர்களுக்கு ஆறுதல் தெரிவித்த அமித் ஷா, இந்த கொடூரமான செயலில் ஈடுபட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் யாரும் தப்பிக்க முடியாது என்றும் கூறினார்.

துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, முதல்வர் உமர் அப்துல்லா, காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால், ஜம்மு காஷ்மீர் பிரதேச காங்கிரஸ் கமிட்டி தலைவர் தாரிக் ஹமீத் உள்ளிட்டோரும் உயிரிழந்தவர்களின் உடல்களுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

# பஹல்காம் சம்பவ இடத்தில் அமித் ஷா ஆய்வு; தாக்குதல் குறித்து என்.ஐ.ஏ துணையுடன் விசாரணை





ஜம்மு காஷ்மீர் பஹல்காமில் பயங்கரவாத தாக்குதல் நடந்த இடத்தை ஆய்வு செய்த உள்துறை அமைச்சர் அமித் ஷா, தாக்குதலில் காயமடைந்து அனந்த்நாக் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை சந்தித்து ஆறுதல் கூறியுள்ளார்.

இதனிடையே, இந்த பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக என்.ஐ.ஏ. துணையுடன் விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய பைசரன் புல்வெளிப்பகுதிக்கு சென்ற உள்துறை அமைச்சர் ஆய்வு செய்தார். அந்தப் பகுதிக்கு ஹெலிகாப்டர் மூலம் சென்ற அமித் ஷா வான்வெளியில் இருந்து தாக்குதல் நடந்த பகுதிகளை பார்வையிட்டார். பின்பு அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆய்வு செய்தார். பஹல்காம் வருவதற்கு முன்பாக ஸ்ரீநகர் பொலிஸ்கட்டுப்பாட்டுஅறைக்குவெளியே அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த பங்கரவாத தாக்குதலில் உயிரிழந்த 26 பேரின் உடல்களுக்கும் இறுதி அஞ்சலி செலுத்தினார். பின்பு பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரை சந்தித்தார்.

இதுகுறித்து எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டிருந்த உள்துறை அமைச்சர், “மிகவும் கனத்த மனதுடன் பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களின் உடல்களுக்கு அஞ்சலி செலுத்தினேன். பயங்கரவாதத்துக்கு இந்தியா ஒருபோதும் அடிபணியாது. இந்தக் கொடூரமான பயங்கரவாத தாக்குதலின் குற்றவாளிகள் தப்பிக்க முடியாது.” என்று தெரிவித்திருந்தார்.

இதனிடையே, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், விமானப்படை தலைமை ஏர் மார்ஷல் ஏ.பி. சிங் மற்றும் பிற அதிகாரிகளுடன் நடந்த கூட்டத்துக்கு தலைமை தாங்கி பிராந்திய பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

இந்தச் சூழ்நிலையில், கடந்த 20 ஆண்டுகளில் குடிமக்கள் மீது நடத்தப்பட்ட மிகவும் மோசமான தாக்குதல் சம்பவமாக கருதப்படும் பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் ஜம்மு காஷ்மீர் பொலிஸுக்கு உதவுவதற்காக தேசிய புலனாய்வு முகமை குழு, தாக்குதல் நடந்த இடத்துக்கு சென்றுள்ளது.

துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் அந்தஸ்து அதிகாரி தலைமையிலான என்.ஐ.ஏ. குழு, சம்பவம் நிகழ்ந்த இடத்தை முழுமையாக மதிப்பீடு செய்தது. இதன் மூலம், தடயவியல் ஆதாரங்களை சேகரித்து, படுகொலைக்கு காரணமானவர்களை அடையாளம் காண பொலிஸுக்கு என்.ஐ.ஏ. உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





# பாகிஸ்தானியர்களை 48 மணித்தியாலங்களுக்குள் நாட்டைவிட்டு வெளியேறுமாறு இந்தியா உத்தரவு

காஷ்மீரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலுக்குப் பின்னர் பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா சில தீர்மானங்களை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி இந்தியாவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களாவன:-

பாகிஸ்தானியர்களுக்கான சார்க் விசா ரத்து செய்யப்பட்டுள்ளது.

புதுடில்லியில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் மற்றும்இஸ்லாமாபாத்தில்உள்ளஇந்தியஉயர்ஸ்தானிகராலயத்தின் ஆலோசகர்களின் பதவிகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இரு உயர்ஸ்தானிகராலயங்களின் அலுவலர்களின் எண்ணிக்கையும் 55 இல் இருந்து 30 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

இந்தியா தனது பாதுகாப்புப் படைகளை “உயர் விழிப்பு நிலையில்” வைத்துள்ளது.

அத்துடன், சார்க் வீசாவில் இந்தியாவில் தங்கியுள்ள அனைத்து பாகிஸ்தானியர்களும் 48 மணி நேரத்துக்குள் வெளியேற வேண்டும் என இந்தியா உத்தரவிட்டுள்ளதாகவும் அந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ரஷ்யா - உக்ரைன் போர் நிறுத்த பேச்சுவார்த்தை ரத்து செய்யப்பட்டது



ரஷ்யா – உக்ரைன் இடையிலான போர் நிறுத்த பேச்சுவார்த்தை ரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்த போர் நிறுத்த பேச்சுவார்த்தை நேற்று நடைபெறவிருந்த நிலையிலேயே ரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்த பேச்சுவார்த்தையில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மார்கோ ரூபியோ உட்பட பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொள்ளத் தீர்மானித்திருந்தனர்.

ஆனால், திட்டமிடல் பிரச்சினை காரணமாகப் போர் நிறுத்த பேச்சுவார்த்தையில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மார்கோ ரூபியோவினால் கலந்துகொள்ள முடியவில்லை என அமெரிக்க வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து அந்த போர் நிறுத்த பேச்சுவார்த்தை ரத்து செய்யப்பட்டது.

ரஷ்யா – உக்ரைன் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் அமைதி தென்படா விட்டால், பேச்சுவார்த்தையிலிருந்து விலகிவிடுவதாக அமெரிக்கா தெரிவித்திருந்தது.

இந்நிலையில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மார்கோ ரூபியோவின் திடீர் ரத்து முடிவு, சந்தேகங்களை எழுப்புவதாக உலக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெறவிருந்த நிலையில், நேற்று காலை கிழக்கு உக்ரைன் மீது ரஷ்யா, ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலில் 8 பேர் உயிரிழந்துள்ளனர். 30 இற்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.







# துருக்கியில் நிலஅதிர்வு

துருக்கியின், இஸ்தான்புல் பகுதியில் 6.2 மெக்னிடியூட் அளவில் நிலஅதிர்வு பதிவாகியுள்ளது.

இந்த நிலஅதிர்வில் ஒருவர் காயமடைந்ததாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

துருக்கி நேரப்படி நேற்று மதியம் 12.49 அளவில் இந்த நிலஅதிர்வு பதிவாகியுள்ளது.





# பொலிஸாரின் கைதின் பின் உயிரிழந்த இளைஞனின் சடலம் நீதிமன்ற உத்தரவின் பேரில் தோண்டி எடுப்பு

வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்த இளைஞனின் சடலம் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் பிரேதப் பரிசோதனைக்காக நேற்று தோண்டி எடுக்கப்பட்டது.

மேற்படி இளைஞனின் உடலைத் தோண்டி எடுத்து மூன்று சிறப்பு வைத்தியர்கள் கொண்ட குழுவால் முழுமையான பிரேதப் பரிசோதனை நடத்தி, அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்ட வைத்திய அதிகாரிகளுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் கடந்த 9ஆம் திகதி உத்தரவிட்டது.

தங்களுடைய மகனின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக அவருடைய பெற்றோர்களால் வழங்கப்பட்ட முறைப்பாட்டை கவனத்திற்கெடுத்த நீதிமன்றம், இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

வெலிக்கடை பொலிஸாரால் கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்ட மேற்படி இளைஞன், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 2ஆம் திகதி உயிரிழந்தார்.

இளைஞனின் மரணம் தொடர்பில் வெலிக்கடை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி, பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் மற்றும் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.









# 74 வயது மூதாட்டி மீது 24 வயது இளைஞன் பாலியல் பலாத்காரம் புரிந்தமையால் பதற்றம்

## போடைஸ் தோட்டப்பகுதியில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(பொகவந்தலாவ நிருபர் எஸ்.சதீஸ்)

ஹட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிக்கோயா போடைஸ் தோட்டபகுதியில் 74வயது மூதாட்டி மீது 24வயது இளைஞன் ஒருவர் பாலியல் தொல்லை விளைவித்தமை தொடர்பில் போடைஸ் பிரதேச மக்கள் இணைந்து நேற்றுப் புதன்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

"குற்றவாளிகளை கைது செய்து சட்டத்தை நிலை நாட்டு!", "கைது செய்!, போதை குற்றவாளியை கைது செய்!", "போதைப் பொருளை ஒழிப்போம்!" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பாதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தை அவர்கள் முன்னெடுத்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டம் இடம் பெற்ற இடத்திற்கு வருகை தந்த ஹட்டன் பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களை சந்தித்துச் சம்பவம் தொடர்பாக தெளிவுபடுத்திய பின்னர் மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக ஹட்டன் பொலிஸாரிடம் தொடர்பு கொண்டு வினவியபோது அவர்கள் கூறிய தகவல்கள் வருமாறு:-

சந்தேகத்தின் பேரில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை கைதான நபரை எதிர்வரும் மே மாதம் 04 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹட்டன் நீதிவானினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அந்தத் தோட்டப் பகுதியில் உள்ள இளைஞன் ஐஸ் போதைப் பொருள் பாவித்துவிட்டு தனிமையில் இருந்த மூதாட்டியின் வீட்டு ஜன்னலை உடைத்து வீட்டுக்குள் புகுந்து மூதாட்டியை பாலியல் தொல்லைக் குட்படுத்தியுள்ளான் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரனைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளனர். இதேவேளை பாதிக்கப்பட்ட 74வயது மூதாட்டி டிக்கோயா கிழங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.





# மஸ்கெலியாவில் குளவிக் கொட்டுக்கு இலக்கான 4 பேர் வைத்தியசாலையில்

(மஸ்கெலியா விசேட நிருபர்)

மஸ்கெலியாவில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் குளவிக் கொட்டுக்கு இலக்கான நால்வர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள சாமி மலை கவரவிலை ஏ பிரிவில் வசிப்பவர்களே இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக்காகினர் எனவும் அதில் ஒருவர் தோட்ட தொழிலாளர் எனவும், ஏனைய மூன்று பேரும் வழி போக்கர்கள் எனவும் கூறப்பட்டது. இந்த நால்வரும் சிகிச்சைக்காக மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கபட்டனர். மூவர் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் 35 வயது முதல் 50 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# படுகொலை செய்யப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்காத சூழ்நிலையில் அரசியல் குழுக்களை அகற்ற வேண்டும் என்பது கொலை அச்சுறுத்தலே!

## அருட்தந்தை சத்திவேல் காட்டமான அறிக்கை



(பா.சதீசன்)

அரச பயங்கரவாதத்தால் எத்தனையோ பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அதற்கான நீதிகிட்ட எந்த விதமான அறிகுறியும் தென்படாத நிலையில் தையிட்டியில் அரசியல் செய்யும் குழுக்களை அகற்ற வேண்டும் எனக் கூறுவதைப் பகிரங்க கொலை அச்சுறுத்தலாகவே கொள்ளல் வேண்டும்.

– இப்படி சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்றுத் தாம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"நாட்டில் இனி இனவாதமும் மதவாதமும் இல்லை" எனக் கூறும் தற்போதைய ஜனாதிபதி தையிட்டியில் பேரினவாத மேலாதிக்க மனப்பான்மையுடனும், ஆக்கிரமிப்பு சிந்தனையுடனும், சட்டத்துக்கு விரோதமாக மக்கள் காணிகளில் கட்டப்பட்டுள்ள கட்டடப் பிரச்சினையை பேரினவாதப் பிக்குகளின் கைகளில் ஒப்படைத்து, பாதிக்கப்பட்ட மக்களை அவர்களின் காலடியில் விழவைப்பதற்கு நினைப்பதும், பாதிக்கப்பட்ட மக்களுக்காக கடந்த இரண்டு வருட காலமாக போராடும் அரசியல் சக்திகளை அகற்றிட திட்டமிடுவதும் இனவாதமே. மதவாதமே. தையிட்டியில் எழுந்துள்ள மக்களின் பிரச்சினை பேரினவாத அரசியலில் ஆணிவேரினால் தோற்றுவிக்கப்பட்டதே. அதனை மூடி மறைத்து அரசியல் பேசும் தற்போதைய ஜனாதிபதியும், முன்னைய பண்டாரநாயக்க, ஜெயவர்தன, சந்திரிகா, ராஜபக்ஷ வழியில் வந்த – தமிழர்களுக்கு எதிரான – அரசியல்வாதியே என்பதில் மாற்றுக் கருத்தில்லை எனலாம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அண்மித்து கொண்டிருக்கையில் கண்டி தலதா மாளிகையில் வைக்கப்படுள்ள புனித தந்தத்தினை பௌத்த மக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தி, அரசியல் செய்யும் ஜனாதிபதி, வடக்கில் தையிட்டியில் அரசியல் நீதிக்காக போராடுபவர்களை குறுகிய அரசியல் நோக்கமும் கொண்ட அரசியல்வாதிகள் என அடையாளப்படுத்தி, குறிப்பாக தெற்கின் மக்களுக்கு அவர்களை இனவாதிகள், மதவாதிகள் என காட்ட நினைப்பது அரசியல் வஞ்சக நோக்கத்துடனாகும்.

தமிழர்களின் குரலாக கொழும்பு தலைநகரில் ஓங்கிக் குரல் கொடுத்த குமார் பொன்னம்பலம் பட்டப்பகலில் கொழும்பு நகரில் சுட்டுக் கொல்லப்பட்டார். அதற்கான நீதி இன்னும் கிட்டவில்லை. அதே அரச பயங்கரவாதத்தால் எத்தனையோ பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அதற்கான நீதி கிட்டும் என்பதற்கான எந்த விதமான அறிகுறியும் தென்படாத நிலையில் தையிட்டியில் அரசியல் செய்யும் குழுக்களை அகற்ற வேண்டும் எனக்கூறுவது பகிரங்கக் கொலை அச்சுறுத்தலாகவே கொள்ளல் வேண்டும்.

தையிட்டி சட்ட விரோத கட்டடத்திற்கு எதிராகவும் நில மீட்புக்காகவும் கடந்த இரண்டு வருட காலமாகப் போராடுபவர்களை கடந்த காலங்களில் பொலிஸார் அச்சுறுத்தி அடாவடித்தனம் புரிந்தமையோடு, விசாரணை எனப் பொலிஸ் நிலையங்களுக்கும் அழைத்தமையுடன் நின்று விடாது நீதிமன்றத்திலும் நிறுத்தி போராட்டத்தை தொடருவதற்கு பல்வேறு தடைகளை ஏற்படுத்தினர். எனினும் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் அதற்கு எதிரான உச்சக்கட்ட தொனியாகவே ஜனாதிபதியின் கூற்று அமைந்துள்ளது.

இறுதி யுத்தத்தில் முள்ளிவாய்க்காலில் நிகழ்த்திய இனப்படு கொலையோடு தமிழர் தாயக அரசியல் அழிந்து, ஒழிந்து விட்டது என நினைக்கும் பேரினவாதிகளுக்கு வடக்கு மற்றும் கிழக்கில் பேரினவாதத்திற்கு எதிராக நடக்கும் அரசியல் போராட்டங்களும் நீண்ட நாள்களாகத் தொடரும் காணாமலாக்கப்பட்டோரின் போராட்டமும் நல்ல பாடத்தைப் புகட்டும். இந்தப் போராட்டங்களை முழுமையாக அடக்கி ஒடுக்குவதற்கு தையிட்டி போராட்டத்தில் தெரியும் அரசியல் தலைமைத்துவத்தையும், அது நாடாளுமன்றத்தில் எழுப்பும் குரலையும் பயங்கரவாத குரலாக சித்திரிக்க எடுக்கும் முயற்சிக்கு உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நன்கு பாடம் புகட்ட வேண்டும்.

தமிழர்களின் அரசியலை அழிக்கப் பல்வேறு வடிவங்களில் இன அழிப்பை தொடர்ந்து இறுதியில் இனப்படுகொலை புரிந்தவர்கள், தொடர்ந்தும் தமிழர் நிலங்களை ஆக்கிரமிக்கப் படை தளங்களை விரிவாக்கிப் பலப்படுத்தியவர்கள், இறுதியில் தமது ஆக்கிரமிப்பு நோக்கத்தினை நிறைவேற்ற படையினரின் பாதுகாப்போடு பௌத்த – சிங்கள அடையாளங்களை விதைக்க தொடங்கி விட்டனர்.

இது விடயங்களில் கடந்த காலங்களில் நேரடியாகவும் மறைமுகமாகும் அங்கீகாரம் அளித்து ஆதரித்த மக்கள் விடுதலை முன்னணியினர் தற்போது தேசிய மக்கள் சக்தி முகத்தோடு வடக்கு, கிழக்கு தமிழர்களின் அரசியலை அழித்திடும் அரசியலை வேகப்படுத்திட முகாமமைத்து அரசியல் யுத்தத்தை ஆரம்பித்துள்ளனர். இவர்கள் தமது அரசியலுக்கு எதிரானவர்கள் எனத் தாம் நினைப்பவர்களை அடக்குவதற்கு இனவாத சாயம் பூச முற்படுவதோடு, அவர்களுக்கு எதிராகப் பயங்கரவாத தடைச் சட்டத்தையும் பாவிக்க தயங்க மாட்டார்கள். இதன் மூலம் தமிழர்களை அரசியல் நீக்கம் செய்வதே இவர்கள் நோக்கம் எனலாம்.

நீண்ட கால இன அழிப்பிற்கும், இறுதி இனப்படு கொலைக்கும், நில ஆக்கிரமிப்பிற்கும், வலிந்து காணாமல் ஆக்கப்படுவதற்கும், பயங்கரவாத தடை ச்சட்டம் தொடர்வதற்கும், பேரினவாத மதவாதிகள் தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிப்பதற்கும் காரணமாக இருந்தவர்கள் தற்போது மேடை அமைத்து நீலி கண்ணீர் வடித்து எங்களுக்கு வாக்களித்தால் உங்களின் கண்ணீரை துடைப்போம் என்று கூறுவது மீண்டும் மீண்டும் தமிழர்களை அழிவுக்குள் தள்ளுவதற்கே.

எனவே எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முதலை கண்ணீர் வடிப்பவர்களையும், தனது கட்சிக்கும், கட்சி உறுப்பினர்களுக்கும் அரசியல் துரோகம் செய்பவர்களையும், அற்ப சலுகைகளுக்காக மறைமுகமாக தமிழர்களின் தேசியத்துக்கு எதிராகவும் செயல்படும் அரசியல் துரோகிகளையும் அடையாள கண்டு, துடைத்தெறிந்து, தமிழர் நிலம் காக்கவும் தேசியம் காக்கவும் துணிச்சலோடு குரல் எழுப்புவோர்க்கு எமது வாக்குப் பலத்தை வெளிப்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும். தேசத்தின் ஒற்றுமையே தேசியத்தின் வலிமை என்பதை நினைவில் கொள்வோம். – என்று உள்ளது.

# பொலிஸாரின் மீது பிழை இருப்பின் விசாரணைகள் முன்னெடுக்கப்படும்

## அரச ஊழியர்கள் ஆதரவளிக்க வேண்டும் என்கிறார் ஜெகதீஸ்வரன் எம்.பி.

(கி.வசந்தன்)

பொதுமக்களின் பாதுகாப்பிற்கே பொலிஸார் உள்ளனர். அவர்கள் மீது பிழை இருப்பின் உரிய வகையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

ஊழல், மோசடியற்ற உள்ளூராட்சி மன்றங்களை அமைப்பதற்கு அரச ஊழியர்கள் தமது ஆதரவைத் திசை காட்டி சின்னத்திற்கு வழங்கவேண்டும். வடக்கில் பொலிஸாருக்கும், பொது மக்களுக்கும் இடையில் இடம்பெறும் பல்வேறு சம்பவங்கள் தொடர்பாக ஊடகங்கள் வாயிலாக அறியமுடிகின்றது.

அந்தவகையில் கடந்த காலங்களில் பொலிஸாரால் பல்வேறு முறைகேடுகள், துஷ்பிரயோகங்கள்



இடம் பெற்றன. எமது அரசாங்கம் வந்ததன் பின்னர் கணிசமான அளவு அவற்றைக் குறைத்திருக்கின்றோம். எதிர்காலத்தில் முழுமையாக அதனை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து பொலிஸார் மீது பிழை இருப்பின் சரியான விசாரணையை நடத்தி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

பொது மக்கள் மீது பொலிஸார் வன்முறையைப் பிரயோகிக்கின்றனர் என அறியக்கூடிய விடயங்களை அந்தந்தப் பிரதேசங்களை சேர்ந்த பொலிஸ் உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்து நடவடிக்கைகளை எடுக்குமாறும் பணிப்புரைகளை விடுத்துள்ளோம்.

எதிர்காலத்தில் இவ்வகையான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும். பொதுமக்களின் பாதுகாப்பிற்கே பொலிஸார் உள்ளனர். அதனைப் பயன்படுத்தி அட்டூழியங்கள் செய்வதற்கு எந்தவித சமரசமும் கிடையாது. எனவே பொது மக்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டால் ஆளும் கட்சி என்ற வகையில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் தயங்கப் போவதில்லை.

கடந்த காலங்களில் இந்த உள்ளூராட்சி மன்றங்கள் மக்கள் மீது வரியையும் வாடகையும் விதித்து அறவிடும் பணியை மாத்திரமே செய்தன. ஆனால் அறவிடப்பட்ட அந்த நிதியை உட்கட்டுமான அபிவிருத்திக்காக செலவளிக்காமல் நிலையான வைப்பில் மாத்திரமே அது வைக்கப்பட்டது. ஆனால் நாம் ஆட்சியமைக்கும் சபைகளில் மக்களின் பணத்தை மக்களின் தேவைகளுக்கும் அபிவிருத்திக்கும் வழங்குவோம்.

எனவே எதிர்வரும் தினங்களில் தபால் மூலமான வாக்குகளை அளிக்கவுள்ள அரச ஊழியர்கள் நன்கு சிந்தித்து உங்கள் வாக்கை திசைகாட்டி சின்னத்திற்கு வழங்க வேண்டும். – என்றார்.



# புதுக்குடியிருப்பில் கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றிவளைப்பில் இளைஞர் ஒருவர் சிக்கினார்

## மற்றும் இருவர் தப்பியோட்டம்; தீவிர தேடலில் பொலிஸார்

(பா.சதீசன்)

புதுக்குடியிருப்பு பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டதுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டார். இருவர் தப்பியோடினர்.

புதுக்குடியிருப்பு பகுதியில் சட்ட விரோதக் கசிப்பு உற்பத்தி, விற்பனை இடம்பெறுவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து நேற்றையதினம் புதுக்குடியிருப்பு புதியகுடியிருப்பு பகுதியில் அந்தக் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டது. அப்போது 330 லீற்றர் கோடாவும், 20 லீற்றர் கசிப்பும், கசிப்பு விற்பனைக்காக பயன்படுத்தப்பட்ட பெறுமதியான மோட்டார் சைக்கிள் என்பன சிக்கின. 15 வயதுடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் சந்தேக நபர்கள் இருவர் தப்பியோடியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொலிஸாரின் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்பட இருக்கின்றார் என புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# பாதுகாப்பு அற்ற கிணற்றில் இருந்து மூன்று வயது சிறுவன் சடலமாக மீட்பு

## சம்மாந்துறைப் பகுதியில் சம்பவம்

**(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)**

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடங்கா 02 பகுதியில் பாதுகாப்பு அற்ற கிணற்றில் இருந்து மூன்று வயதுடைய நஸ்லாஸ் லுக்மான் என்ற சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை வேளை மேற்படி சிறுவனின் வீட்டின் பின்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட சிறுவனின் உடல் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது ஏற்கனவே சிறுவன் மரணம் அடைந்து விட்டமை தெரியவந்துள்ளது.

அருகில் இருந்து வீட்டின் சீ.சீ.ரி.வி. கமராவை சோதனை செய்த போது மூன்று வயது சிறுவனை வேறு ஒரு சிறுவன் அழைத்துச் செல்லுவது தெளிவாக தெரிந்தது.

இதனையடுத்து, சிறுவனை அழைத்துச் சென்றவன் எனச் சந்தேகிக்கப்படும் அதே பகுதியைச் சேர்ந்த 11 வயது மதிக்கத்தக்க சிறுவனிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். கிணற்றில் மீன் இருப்பதாக கூறி அதைப் பார்க்க அங்கு சென்ற போது மூன்று வயதுடைய சிறுவன் தவறி கிணற்றினுள் விழுந்தான் என வாக்குமூலம் வழங்கியுள்ளான்.

மூன்று வயது சிறுவனின் உடல் நேற்று புதன்கிழமை பிரேத பரிசோதனைக்காக அம்பாறை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. சிறுவனின் உடல் கூறு இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக நீதிவான் நீதிமன்றத்தில் 11 வயது மதிக்கத்தக்க சிறுவனை ஆஜர் படுத்திய போது மேலதிக விசாரணைக்காகவும், சிறுவனின் பாதுகாப்புக்காகவும் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் வைக்குமாறு நீதிவானினால் உத்தரவிடப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மூன்று வயது சிறுவனின் மரணம் சம்மாந்துறை பிரதேசத்தில் அதிர்ச்சியையும் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.



## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# ஜே.வி.பியின் ஒற்றையாட்சித் திட்டத்துக்கு தமிழரசுக் கட்சி ஆதரவு வழங்குகின்றதாம்!

### காட்டத்துடன் கூறுகின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்







(கனகராசா சரவணன்)

ஜே.வி.பியைப் பிழையென்று பிரசாரம் முன்னெடுக்கும் தமிழரசுக் கட்சி, ஜே.வி.பியின் ஒற்றை ஆட்சிக்கு ஆதரவு வழங்குகின்றது. ஜே.வி.பி. பிழையென்றால் ஜே.வி.பி.யின் கொள்கையைக் கொண்டு செல்லும் தமிழரசுக் கட்சி சரியா என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும் என அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அகில இலங்கைத் தமிழ்ஜ் காங்கிரஸ் கட்சி மற்றும் தமிழ் மக்கள் பேரவை என்பன இணைந்து இம்முறை கிழக்கில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் களமிறங்கியுள்ளன.

இந்த அணியின் கல்குடா தேர்தல் தொகுதியில் ஏறாவூர்ப்பற்று பிரதேச சபைக்கான வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை களுவன்கேணியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையில் இடம்பெற்றுது.

இதில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறிகாந்தா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செ.கஜேந்திரன், முன்னணியின் உறுப்பினர் சட்டத்தரணி சுகாஷ் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர். இதன்போது உரையாற்றிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இறுதியாக நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் தமிழ் மக்களை தமிழ்த் தேசிய நிலைப்பாட்டிலிருந்து விலக வைத்துள்ளதாக இலங்கையில் உள்ள தூதரகங்கள் கூறிவருகின்றன. அதற்கு பலவிதமான பதில்களைச் சொல்லி வருகின்றோம்.

மக்கள் சக்தி என்ற பெயரில் ஆட்சி செய்கின்ற ஜே.வி.பி. என்கின்ற அமைப்பு வடகிழக்கில் தமிழ் மக்களின் ஆணையைப் பெறவில்லையென்பதைத் தெளிவாகக் கூறிவருகின்றோம்.

அடுத்த தேர்தலில் தமிழ் மக்கள் தங்களது தமிழ்த் தேசிய கொள்கையில் உறுதியாக நிற்கின்றார்கள் என்பதை தெளிவாக வெளிப்படுத்தச் சொல்லுங்கள் என்று எங்களிடம் பல்வேறு நாட்டின் தூதரகங்கள் கோரியுள்ளன.

ஜே.வி.பியினர் தெற்கில் 70 வீதமான வாக்கினைப் பெற்றவர்கள். அதே அலை வடகிழக்கின் தமிழர் தாயப் பகுதியிலும் கூட அவர்களுக்கான ஆதரவு கிடைத்திருக்கலாம் என்பதில் நியாயமுள்ளது. அதனை முறியடிக்கும் பொறுப்பு எங்களிடமே இருக்கின்றது.

தமிழ் மக்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் விட்ட தவறை உணர்ந்து அடுத்த தேர்தலிலே தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை நிலைநாட்டக் கூடிய வகையிலே வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும்.

கடந்த தேர்தலில் எங்களுடைய மக்கள் தவறுதலாக ஜே.வி.பி. என்ற இந்த இனவாதக் கட்சிக்கு ஏதோ ஒரு வகையில் ஆணை கொடுத்திருக்கின்றனர். அந்தத் தவறான பாடத்தை திருத்துவதாக இருந்தால் நடைபெறவுள்ள இந்தத் தேர்தலில் அந்தப் பிழையான காட்சியைத் திருத்த வேண்டும்.

இந்த ஜே.வி.பியை பிழையான, தவறான தரப்பு என ஏன் கூறுகின்றோம் என ஆழமாக விளங்கி கொள்ள வேண்டும். மற்றச் சிங்களக் கட்சிகள் தமிழ்ப் பகுதியில் வந்து வாக்கை பெறுவதை ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம். ஏன் என்றால் அவர்கள் வெளிப்படையாக இனவாத நிகழ்சி நிரலை கொண்டவர்கள் என அனைத்துத் தமிழ் மக்களுக்கும் தெரியும். அதைவிட தென்தமிழீழ மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

தமிழ்த் தாயகத்தில் இன்று கேள்விக்கு உட்பட்ட சூழ்நிலையில் வாழ்கின்றவர்களாக இருந்தால் அது தென் தமிழீழ மண்ணில் வாழுகின்ற மக்கள்

தொடர்ச்சி ▼

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# ஜே.வி.பியின் ஒற்றையாட்சித் திட்டத்துக்கு தமிழரசுக் கட்சி ஆதரவு வழங்குகின்றதாம்!





தொடர்ச்சி▲

தான். அதற்கான அடிக்காரணம் இந்த மண்ணைத்தான் திட்டமிட்ட வகையிலே மாறி மாறிவந்த ஐக்கிய தேசிய கட்சியாக இருக்கலாம், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் ஏனைய சிங்கள கட்சிகள் உட்பட பலகட்சிகளாக இருக்கலாம், அவை அனைத்தும் இணைந்து கடந்த 76 வருடமாக சிங்கள மயமாக்கல், பௌத்த மயமாக்கல் மூலம் கிழக்கு மாகாணத்தை திட்டமிட்ட வகையில் அழித்துள்ளன.

இது அனைத்தும் அபிவிருத்தி என்ற பேரிலேயே முன்னெடுக்கப்பட்டன. கல்லோயா திட்டம், மகாவலி திட்டம், தற்போது மாதுறு ஓயா திட்டம் என்பன திட்டமிட்ட வகையில் அபிவிருத்தி எனத் தெரிவித்து தெற்குச் சிங்கள மக்களுக்கு இலாபம் கொடுக்கும் வகையில் அவர்களை கொண்டுவந்து குடியேற்றி மாற்றியமைக்கும் திட்டங்கள்தாம்.

இந்த 76 வருடத்தில் ஜே.வி.பி. ஒருநாளும் நாட்டை ஆட்சி செய்ய வில்லை. எனவே அவர்களைப் பற்றி பெரியளவில் தெரியாது. அதனால் தெற்கில் ஓர் அலையடிக்க அந்த அலையைப. பார்த்து இதுவரைக்கும் ஜே.வி.பிக்கு வாக்களிக்காத வடக்கு, கிழக்கு மண்ணில் வாக்குகள் வீழ்ந் தன. இதுதான் உண்மை. - என் றார்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கொலைகளால் பாதுகாப்பு நிலைமை குலைந்து மக்கள் அச்சமுறும் சூழல்!

## வவுனியாக் கூட்டத்தில் றிசாட் எம்.பி. விசனம் தெரிவிப்பு



**(கி.வசந்தன்)**

நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கொலைகள் மற்றும் பாதாள உலக கோஷ்டியினுடைய கொலைகள் நாட்டின் பாதுகாப்பு நிலைமை குலைந்து மக்கள் அச்சம் கொள்ளும் நிலையை உருவாக்கியுள்ளன என ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியா, அண்ணாநகர் பகுதியில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரை ஆதரித்து நேற்று இரவு இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் ஜே.வி.பி. எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் நாட்டில் இவ்வாறான கொலைகள் இடம்பெற்ற போது அதற்கு எதிராக ஆட்சியாளர்கள் மீது குற்றம் சுமத்திப் பேசியதைக் கண்டோம். ஆனால் புதிய அரசாங்கத்தின் வருகையின் பின் அடிக்கடி கொலைகள், பாதாள உலக கோஷ்டியினுடைய கொலைகள் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அண்மையில் கொல்லப்பட்டவர் சம்பந்தமாக எங்களுக்கு வேறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும் தொடர்ச்சியாக இவ்வாறான கொலைகள் இடம்பெறுவது எதிர்காலத்தில் சுற்றுலாத் துறை பாதிக்கப்படுவதற்கும், இந்த நாட்டின் பாதுகாப்பு நிலைமை குலைந்து மக்கள் அச்சம் கொள்ளும் நிலை உருவாகுவதற்கும் வழிவகுக்கும்.

இந்த அரசாங்கம் அத்தியாவசியப் பொருள்களின் விலை தொடர்பில் இன்னும் மெத்தனப் போக்கோடு தான் நடந்து கொள்கின்றது. அதனையும் கவனத்தில் கொண்டு செயற்படுத்த வேண்டும். அதேபோல் தேர்தலுக்கு முன்னர் வழங்கிய பல வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளாக இருக்கின்றன.

அதுமட்டுமல்லாது, முன்னாள்ஜனாதிபதி கோட்டபாய, தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கா எல்லோரும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகளை கண்டு பிடிப்பார்கள் எனக் கூறித்தான் அதிகாரத்துக்கு வந்தார்கள். அதுவும் இந்த அரசாங்கம் ஏபரல் 21 இற்குள் குற்றவாளிகளை கண்டு பிடிப்போம், அறிவிப்போம் என்றார்கள். ஆனால் எல்லாம் செய்தியாகத்தான் இருக்கின்றனவே தவிர, மக்கள் எதிர்பார்த்த எதிர்பார்ப்புக்கள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களும், சிறைகளுக்குச் சென்று பதிக்கப்பட்ட இஸ்லாமிய மக்களும் இந்த விடயத்தில் அராங்கத்தின் மீது பெரிய எதிர்பார்ப்போடு இருக்கிறார்கள்.

எதிர்க் கட்சியில் இருக்கும் போது பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிராகப் பேசி வந்தார்கள். இப்போது அந்தப் பயங்கரவாத தடைச்சட்டத்தைப் பயன்படுத்திச் சின்ன வேலைகளுக்கு கைது செய்கிறார்கள். குறிப்பாக போஸ்டர் ஒட்டுதல், முகப் புத்தகத்தில் பதிவேற்றுதல் என்பவற்றுக்கு இந்த சட்டத்தைப் பயன்படுத்துகிறார்கள். உடனடியாக அதனையும் நீக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன். – என்றார்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# தமிழரசு கட்சியின் செல்வாக்கு இந்த முறை குறைந்துள்ளதாம்!

### தம் கட்சியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வில் விக்கி தெரிவிப்பு





**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)**

தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் மத்தியில் இம்முறை தேர்தலில் புதிய கூட்டணிகள் தோற்றம் பெற்றுள்ளன. தமிழரசு கட்சியின் செல்வாக்கு குறைந்துள்ளது. மக்களின் மனநிலை எப்படி இருக்கிறது என்பதை சரியாக கணிப்பிடமுடியாத நிலை உள்ளது. ஆகவே, என்னைப் பொறுத்தவரையில் தாம் விரும்பும் தமிழ் கட்சிகளுக்கு வாக்களிக்குமாறு நாம் தமிழ் மக்களைக் கோரவேண்டும் என்று நினைக்கின்றேன் என தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர்நாயகம் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் நேற்றைய தினம் கொக்குவிலில் அமைந்துள்ள தனியார் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கட்சியின் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மே மாதம் 6 ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தல்கள் நடைபெறப் போகின்றன. நாளைய தினம் (இன்று) தபால் வாக்குகள் அளிக்கும் தினம் குறிக்கப்பட்டுள்ளது. பல சிக்கல்கள் மத்தியில்தான் எமது கட்சி இம்முறை உள்ளூராட்சி தேர்தல்களில் கலந்து கொள்கின்றது. எனினும் எமது வேட்பாளர்களை மக்களுக்கு அறிமுகம் செய்து வைக்கும் அதே நேரத்தில் எமது கட்சி பற்றியும் நாம் அறிமுகம் செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

2018 இல் தான் எமது கட்சி ஆரம்பிக்கப்பட்டது. 2020 இல் நான் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் எமது கட்சி பதிவு செய்யப்பட்டது. ஆகவே தற்போது எமது கட்சி பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி. எமது கட்சிக்குச் சில சிறப்பியல்புகள் உண்டு.

இளைஞர் மற்றும் பெண்களை உயர்ச்சி பெற ஆரம்பிக்கப்பட்ட கட்சியே எமது கட்சி. எமக்கென்று பிரத்தியேகமான அரசியல், சமூக, பொருளாதார எதிர்பார்ப்புக்கள் உள்ளன.

அரசியலிலே நாங்கள் கூட்டு சமஷ்டி முறையையே சிபார்சு செய்து வருகின்றோம். கூட்டு சமஷ்டி முறை மாகாண அலகுகளுக்கு கூடிய சுயாட்சியையும் அதிகாரத்தையும் வழங்க வல்லன. மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களையும் மாகாண அலகுகளின் அதிகாரங்களையும் வரையறுத்து, வலியுறுத்தி, வேறுபடுத்தி சொல்லவல்லன.

எமது அரசியல் நோக்கு தன்னாட்சி சார்ந்தது. எமது தனிமனித நோக்கு தமிழ் மக்களாகிய நாம் பிறரின் தயவில் வாழாது எம்மை நம்பி, எமது வலுவை நம்பி, எமது கல்வியை நம்பி, எமது வளங்களை நம்பி தற்சார்பாக வாழப் பழகிக் கொள்வதாகும். எமது பொருளாதார நோக்கு எமது பிராந்தியங்களின் பொருளாதாரம் தன்னிறைவு பெற

தொடர்ச்சி ▼

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# தமிழரசு கட்சியின் செல்வாக்கு இந்த முறை குறைந்துள்ளதாம்!

தொடர்ச்சி ▲

வேண்டும் என்பதாகும்.

நாம் போர்க் காலத்தின் பின்னர் மற்றவர்களை நம்பி, மற்றவர்களின் கொடையை நம்பி, மற்றவர்கள் தாழ்ந்து காட்டும் இசைவை நம்பி வாழ்ந்து வருகின்றோம். இந் நிலை மாற வேண்டும். நாம் எமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை முக்கியமாக உணவு வகைகளை நாமே உருவாக்க வேண்டும் என்ற கொள்கையுடையவர்கள். உணவுப் பொருள்களின் தன்னிறைவு, உடை பொருள்களின் தன்னிறைவு, பாரம்பரிய தமிழ் மருந்து வகைகளின் தன்னிறைவு, மேலும் எமது வளங்களை நாமே எமக்கென விருத்தி செய்து வாழ வேண்டும் என்ற கொள்கையுடையவர்கள். ஆகவே தன்னாட்சி, தற்சார்பு, தன்னிறைவு என்பன எமது தாரக மந்திரங்களாவன.



அடுத்து எமது கட்சி சுத்தமான கைகளுடன் நாம் ஆட்சி செய்ய வேண்டும் என்ற கொள்கையையுடையது. குறிப்பாக உள்ளூராட்சி நிர்வாகத்தில் எமது வேட்பாளர்கள் ஊழலற்ற ஒரு சிறந்த நிர்வாகத்தை உருவாக்கப் பாடுபடுவர். இன்னொரு சிறப்பம்சம் எமக்குண்டு. நாம் வீணாக மற்றைய தமிழ்த் தேசியக் கட்சிகளையோ அரசியல் வாதிகளையோ விமர்சித்து எமது அரசியலை வழிநடத்த விருப்பமுடையவர்கள் அல்லர். எமது சிறப்பியல்புகளை நாம் குறிப்பிட்டு எமது கொள்கைகளை எடுத்துரைத்து எமது மக்களுக்கான கனவுகளை நாம் நனவாக்க முன்வந்துள்ளோம் என்ற செய்தியை மக்களுக்கு நாம் அறிவிக்க இருக்கின்றோம்.

எம்மை நம்பி எமது வாக்காளர்கள் மனமுவந்து எமக்கு வாக்களிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாம் அவர்கள் முன்வைப்போம். தன்னல மேம்பாட்டுக்காகவே நாம் பொதுநல வாழ்க்கையில் கலந்து கொண்டுள்ளோம் என்ற எண்ணம் எங்கள் இளைஞர், யுவதிகள் மத்தியில் கிஞ்சித்தேனும் இல்லை என்பதை நாம் எம் மக்களுக்கு உணர்த்துவோம்.

எம்மைப் பொறுத்த வரையில் எமது பொது எதிரி அரசாங்கக் கட்சி. அதனை இனிமேலும் எம்மிடையே வளரவிடக் கூடாது என்பதில் நாம் கண்ணும் கருத்துமாக உள்ளோம். தொழிற்சங்கங்கள் ஊடாகவும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிளவுகளின் நிமித்தமும் சென்றமுறை அரசாங்கக்கட்சி வட கிழக்கில் கால் பதிக்க நேரிட்டது. ஆனால் இம்முறை உள்ளூராட்சி தேர்தலில் அதனை நடைபெறவிடமாட்டோம்.



தேர்தல் முடிந்தவுடன் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் சேர்ந்து ஆட்சி அமைக்க முயல்வோம். பொதுவாக அரசாங்கக் கட்சியை நாம் புறக்கணிப்போம். அரசாங்கக்கட்சி உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பதை நாம் தடுக்கவே செய்வோம். அரசாங்கத்தின் ஒரு முக்கிய கோட்பாட்டின் விளைவே எம்மை இது பற்றி ஆழமாகச் சிந்திக்க வைத்துள்ளது. தமக்கு வாக்களித்தால் மட்டுமே நிதி வசதிகள் எமது உள்ளூராட்சி மன்றங்களுக்குக் கிடைக்கும் என்றிருக்கின்றார்கள் ஆளும் தரப்பினர். அவர்கள் பதவிக்கு வந்தால் எம்மை அடிமையாக்கி விடுவார்கள் என்பது இதிலிருந்து புலப்படுகின்றது.

அந்த விதத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் யாவும் எமது உறவுகளே என்பதும் அரசாங்கத்துடன் சேர்ந்து செல்லும் கட்சிகள் அனைத்தும் வடகிழக்கு வாழ் தமிழ் மக்களின் தற்கால, வருங்கால நல்வாழ்வுக்குப் பங்கம் விளைவிப்பவர்களே என்பதும் புலனாகின்றது. நாம் உள்ளூராட்சி மன்றங்களை எடுத்து நிர்வகிக்கும் போது அரசாங்கத்தையே நம்பி இருக்கப் போவதில்லை. எமது உள்ளூராட்சி அலகுகளை தனியார் துறையுடன் சேர்ந்து முன்னேற்ற விழைவோம்.

நான் முதலமைச்சராக இருந்த போது வெளிநாட்டு நகரங்களின் நிர்வாகங்களுடன் உடன்படிக்கைகளை உருவாக்கி பரஸ்பரம் உதவிகளைப் பரிமாற்றிக் கொண்டோம். கனடாவின் ஒன்டாரியோ நகரம், இங்கிலாந்தின் கிங்ஸ்டன் நகரம் போன்றவற்றுடன் பரஸ்பர உடன்பாடுகளைக் கைமாற்றிக் கொண்டோம். இதனால் பல நன்மைகளை பெற்றுக் கொடுத்தோம். உதாரணத்திற்கு தலைசிறந்த மேலைநாட்டு மருத்துவர்கள் எமது மருத்துவர்களுடன் அளவளாவ வழிவகுத்தோம். மேலைநாட்டு மருந்து வகைகளைப் எமது மக்களுக்குப் பெற்றுக் கொடுத்தோம். இவ்வாறான இரட்டைநகர உடன்பாடுகளின் மூலம் எமது உள்ளூராட்சி அலகுகளை முன்னேற்றத் திட்டமிட்டுள்ளோம்.

தொடர்ச்சி ▼

உள்ளூராட்சி சபை
தேர்தல் களம்

# தமிழரசு கட்சியின் செல்வாக்கு இந்த முறை குறைந்துள்ளதாம்!

தொடர்ச்சி▲

இன்று தமிழ் தேசியம் என்றுமில்லாதவகையில் அரசியல் ரீதியாக மிகப்பெரும் சவாலை எதிர்கொண்டிருக்கும் காலகட்டத்தில் நாம் நின்று கொண்டிருக்கின்றோம். சுதந்திரம் கிடைத்த பின்னர் இன்றுள்ளதுபோல என்றைக்குமே தமிழர் தாயகத்தில் தமிழ் தேசியம் சிங்கள அரசியல் கட்சிகளின் ஆதிக்கத்துக்கு அஞ்சவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது இல்லை. இதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றை விவரிப்பது இப்போது இங்கு பொருத்தம் அல்ல. ஆனால், 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் எந்த ஒரு தமிழ் அரசியல் கட்சியினதும் செயற்பாடுகள் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக தமிழ் மக்களுக்கு பலாபலன்களை பெற்றுக்கொடுக்க தவறியமையே பிரதான காரணம் ஆகும். கடந்த தேர்தல்களில் மக்கள் எம்மை நம்பி பல தடவைகள் வாக்களித்து எமக்கு சந்தர்ப்பம் தந்திருந்தார்கள். ஆனால் எந்த ஒரு தமிழ் அரசியல் கட்சியும் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவில்லை. இந்த ஏமாற்றமும் கோபமும் இன்று சிங்கள அரசியல் கட்சிகளுக்கு குறிப்பாக தேசிய மக்கள் சக்திக்கு வாய்ப்பாகியிருக்கின்றது.

எம்முள் சிலர் பல எத்தனிப்புகளில் ஈடுபட்டும் சிங்கள அரசியல்வாதிகளினால் ஏமாற்றப்பட்டோம். ஆகவே தான் எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தல்கள் எமக்கு மிகவும் முக்கியமானது. ஒருபுறம் எமது கட்சி சில சபைகளிலாவது உள்ளூராட்சி அதிகாரத்தை கைப்பற்ற வேண்டிய தேவை. மறுபுறம் தமிழ் தேசிய அரசியல், சிங்கள அரசியல் கட்சிகளினால் சிதைக்கப்படுவதில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டிய தேவை.

யாழ் மாநகர சபையில் நாம் மணிவண்ணன் தலைமையில் வென்று ஆட்சி அமைப்பதற்கு நிறைய வாய்ப்பு இருந்தபோதிலும் துரதிஷ்டவசமாக அந்த வாய்ப்பு எமக்கு கிடைக்கவில்லை. இருந்தபோதிலும், நல்லூர், காரைநகர் மற்றும் சில தொகுதிகளில் நாம் முன்னிலை வகித்து ஆட்சி அமைக்கும் சந்தர்ப்பம் இருப்பதால் நாம் மிகவும் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கின்றது. இதற்கான வியூகங்களை மணிவண்ணன் மற்றும் பார்த்திபன் ஆகியோரின் தலைமையில் உடனடியாக மேற்கொள்ளவேண்டும். சொற்ப கால அவகாசமே எமக்கு இருக்கிறது. ஆகவே நாம் விரைவாக செயற்பட வேண்டியிருக்கின்றது.

அதேநேரம், நாம் போட்டியிடாத தொகுதிகளில் சிங்கள தேசிய கட்சிகள் வெற்றிபெறாமல் தடுக்கும் வகையில் நாம் செயற்படவேண்டிய கடமையும் எமக்கு இருக்கிறது. ஏதாவது ஒரு தமிழ் தேசிய கட்சிக்கு வாக்களிக்குமாறு நாம் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு விரலை சுட்டுவதா அல்லது மக்களை தாம் விரும்பும் ஒரு தமிழ் தேசிய கட்சிக்கு வாக்களிக்குமாறு கூறுவதா என்று நாம் தீர்மானிக்க வேண்டும். இந்த தேர்தலின் பின்னர் மாகாண சபை தேர்தல் உடனடியாக வராதுவிட்டாலும் மாகாண சபை தேர்தல் என்றோ ஒரு நாள் நடைபெறும். ஆகவே, அதனை கவனத்தில் கொண்டு நாம் முடிவுகளை எடுக்க வேண்டும்.

தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் மத்தியில் இம்முறை தேர்தலில் புதிய கூட்டணிகள் தோற்றம் பெற்றுள்ளன. தமிழரசு கட்சியின் செல்வாக்கு குறைந்துள்ளது. மக்களின் மனநிலை எப்படி இருக்கிறது என்பதை சரியாக கணிப்பிடமுடியாத நிலை உள்ளது. ஆகவே, என்னைப் பொறுத்தவரையில் தாம் விரும்பும் தமிழ் கட்சிகளுக்கு வாக்களிக்குமாறு நாம் தமிழ் மக்களைக் கோரவேண்டும் என்று நினைக்கின்றேன். ஆனால், இதனை கவனமாக நாம் செய்யவேண்டும். ஏனென்றால், எமது இந்த கோரிக்கை நாம் தனியாக போட்டியிடும் தொகுதிகளில் வாக்காளர்களுக்கு புரியாத அல்லது குழப்பமான செய்தியாக அமைந்துவிடக் கூடாது. அதேநேரம், சிங்கள கட்சிகளுக்கு குறிப்பாக தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து தமிழ் மக்கள் தமது தலையில் தாமே மண்ணை வாரி இறைத்துவிடக்கூடாது என்ற மிகத் தீவிரமான பிரசாரத்தை மேற்கொள்ளவேண்டும். இதனை நான் என்னால் முடிந்தளவுக்குக் காத்திரமாக மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளேன்.

இந்த உள்ளூராட்சி சபை தேர்தல் முடிந்ததும் நாம் எமது கட்சியை வளர்க்கும் பணிகளில் தீவிரமாக ஈடுபட வேண்டியிருக்கின்றது. கட்சி கிளைகளை ஸ்தாபித்து, மாவட்ட அமைப்பாளர்களை நியமித்து, உறுப்பினர்களை நாம் சேர்க்க வேண்டும். இவற்றுக்கு அடிப்படையாக கட்சி அமைப்பில் சில மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என்று நான் நம்புகின்றேன். விரைவில் அதையும் செய்வோம்.

நாம் வலிய எந்தக் கட்சியுடனுமே மோதல்களில் ஈடுபடமாட்டோம். ஆனால் வந்த சண்டையை விட்டுக் கொடுக்கவும் மாட்டோம்!

ஆகவே இறுதியில் எம்மைப் பற்றி நான் சுருக்கமாகக் கூறுவதானால், நாம் ஓர் இளம் கட்சி. இளைஞர், யுவதிகள் உயர்ச்சி பெற உந்துதல்களைப் பெற்றுக் கொடுக்கும் கட்சி. எமக்கென தாரக மந்திரங்களான தன்னாட்சி, தற்சார்பு, தன்னிறைவு என்பன உள்ளன. அவற்றின் அடிப்படையில் எமது பயணம் தொடரும்.எமது அரசியல் நோக்கு கூட்டு சமஷ்டி அரசியல் முறையை உருவாக்குவது.

எமது கட்சி சுத்தமான கைகளுடன் அரசியல் செய்ய முன்வந்துள்ள கட்சி. ஊழலற்ற நிர்வாகத்தை நாம் உள்ளூராட்சி மன்றங்களில் உருவாக்குவோம். நாம் வலிய சண்டைகளுக்குப் போகின்றவர்கள் அல்லர். வந்த சண்டையை விட்டுக் கொடுப்பவர்களும் அல்லர். நாம் அரசாங்கக் கட்சிக்கு எதிரானவர்கள். அரசாங்கக் கட்சி வடகிழக்கில் காலூன்றுவதை விரும்பாதவர்கள். எவ்வளவு தான் பொருளாதார நன்மைகளை அரசாங்கம் பெற்றுத் தந்தாலும் அடிப்படையில் அவர்கள் தமிழர்களின் தனித்துவத்தை ஏற்பவர்கள் அல்லர்.

எம்மை சிங்கள சமூகத்தின் அதிகாரத்தின் கீழ் வைத்திருக்கத் தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் யாவுமே தொடர் சதியில் ஈடுபட்டு வந்துள்ளன. இப்போதைய அரசாங்கம் அதற்கு விதிவிலக்கல்ல. நாம் தனியார் துறைகளுடன் சேர்ந்து நகர அபிவிருத்தியில் ஈடுபடுவோம். வெறுமனே அரசாங்க உதவியை நம்பி எமது மக்கள் தேவைகளைப் புறக்கணிக்க மாட்டோம். எமது புலம்பெயர் உறவுகளுடன் தொடர்புகள் வைத்து இரட்டை நகர உடன்படிக்கைகள் போன்றவற்றினூடாக உள்ளூராட்சி அலகுகளை வளர்ச்சி பெறச் செய்ய உள்ளோம்.

இதற்கு எமது மக்களின் ஆதரவையும் அனுசரணையையும் வேண்டி நிற்கின்றோம். – என்றார்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# அரசின் நிதி தேவையேயில்லை மணிவண்ணன் இடித்துரைப்பு!



(பிரபாகரன் டிலக்சன்)

தனது கட்சிக்கு வாக்களிக்காது விட்டால் இந்த பிரதேசங்களை அபி விருத்தி செய்ய நிதி ஒதுக்குவதற்கு பத்து தடவை சிந்திக்க வேண்டும் என்று ஜனாதிபதி அநுர சொல்லியிருக்கின் றார். அவர் ஏன் பத்து தடவை சிந்திக்க வேண்டும். அவர்களின் நிதி எங்களுக்கு தேவையில்லை. அரசாங்க நிதியை பெறாமலே முப்பது வருடங்களாக தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்தையும் நிழல் அரசாங்கத்தையும் நடத்தி வந் தார்கள். இதனை நீங்கள் மறந்து விடாதீர்கள். உங்களுடைய அச்சுறுத்தி, ஏமாற்றும் அரசியலை குப்பைக்குள் போடுங்கள்.

– இவ்வாறு யாழ் மாநகர முன்னாள் முதல்வர் சட்டத்தரணி மணிவண் ணன் தெரிவித்தார். தமிழ் மக்கள் கூட்டணியின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் நேற் றைய தினம் கொக்குவிலில் அமைந் துள்ள தனியார் மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:–

நாங்கள் போட்டியிடாத சபைகளில் கூட யார் வரக்கூடாது என்பதில் தெளி வாக இருக்கின்றோம். இன்று வடக்கு, கிழக்கில் உள்ள உள்ளூராட்சி மன்றங்க ளில் தலைசிறந்த உள்ளூராட்சி மன்றமாக யாழ்ப்பாணம் மாநகரசபை காணப்படுகின்றது. நாங்கள் கடந்த காலங்களில் யாழ்ப்பாணம் மாநகர சபையை மிகச் சிறப்பாக ஆட்சி செய்தி ருக்கின்றோம்.

யாழ்ப்பாணத்தின் அடையாளமாக யாழ் மாநகர சபை காணப்படுகிறது. அந்த சபையிலே ஒரு பொம்மையை இருத்த வேண்டும் என தென்னி லங்கை கட்சி துடிக்கிறது. மாநகர சபையை தென்னிலங்கை கட்சி ஆட்சி பீடத்தில் ஏறிவிட்டது என்ற செய்தியை சொல்லவேண்டும் என்பதற்காக நாங் கள் நயவஞ்சகமாக தேர்தலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கின்றோம்.

எங்களை வெளியேற்றி மாநகர சபையை கைப்பற்ற வேண்டும் என்று துடிக்கின்ற தரப்புகளுக்கு மக்கள் மரண அடியை கொடுப்பார்கள் என்ற நம் பிக்கை இருக்கிறது.

எங்கள் வேட்பு மனுவை சதி செய்து நிராகரித்திருக்கிறார்கள். எங்களு டையது வேட்புமனு என்ன காரணத்திற் காக நிராகரிக்கப்பட்டதோ அது போல் நிராகரிக்கப்பட்ட அனைத்து வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால் எங்களுடைய வேட்புமனு மட்டும் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. இன்று இலங்கையில் தெரிவு செய்யப்பட்டு நீதி வழங்கப்பட்டிருக்கிறது. நாங்கள் இந்த சதிகளை கண்டு ஓய்ந்துவிடப் போவ தில்லை. எதிர்காலத்தில் வழிநடத்த தயாராக உள்ளோம்.

என்.பி.பி. கட்சிக்கு வாக்களிக்காது விட்டால் இந்த பிரதேசங்களை அபி விருத்தி செய்ய நிதி ஒதுக்குவதற்கு பத்து தடவை சிந்திக்க வேண்டும் என்று ஜனாதிபதி அநுர சொல்லி யிருக்கின்றார். அவர் ஏன் பத்து தடவை சிந்திக்க வேண்டும்? அவர்களின் நிதி எங்களுக்கு தேவையில்லை.

யாழ்ப்பாணம் மாநகர சபை, நல்லூர் பிரதேச சபை ஆகியவற்றை இரண்டு வருடங்கள் ஆட்சி செய்த போது ஒரு சதம் கூட மத்திய அரசாங்கம் எங்க ளுக்கு தரவில்லை. எங்களுடைய புலம்பெயர் தமிழர்களின் நிதியி லும் சபையின் சொந்த நிதியிலுமே நாங்கள் அபிவிருத்திகளை செய் திருக்கின்றோம். மக்களுக்கான ஊழ லற்ற ஆட்சியை செய்திருக்கின்றோம்.

புலம்பெயர் தமிழர்களுடைய உதவி யோடு எங்கள் தேசத்தை நாங்களே நிர்மாணித்திருக்கின்றோம். எனவே உங்கள் நிதி எங்களுக்கு தேவை இல்லை. உங்களுடைய அச்சுறுத்தல் களை எங்கள் மேல் காட்ட வேண்டாம்.

அரசாங்க நிதியை பெறாமலே முப்பது வருடங்களாக தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்தையும் நிழல் அரசாங்கத்தையும் நடத்தி வந்தார்கள். இதனை நீங்கள் மறந்துவிடாதீர்கள். உங்களுடைய அச்சுறுத்தி, ஏமாற்றும் அரசியலை குப்பைக்குள் போடுங்கள்.

எங்களுடைய சொந்த நிதியிலும், புலம்பெயர் தமிழர்களின் நிதியிலும் எங்களுடைய தேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின் றோம். நாங்களே கட்டியெழுப்புவோம். – என்றார்.




# நடைபெறும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் எடுக்க வேண்டிய நிலைப்பாடு

**நடைபெறும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் எடுக்க வேண்டிய நிலைப்பாடு குறித்து திருகோணமலையை மையமாகக் கொண்டு இயங்கும் 'புமுதி' - சமூக உரிமைகளுக்கான அமைப்பு வெளியிட்ட மதிப்பாய்வறிக்கை இது.**

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு எதிர்வரும் மாதம் 6ம் திகதி தேர்தல் நடைபெறும் என தேர்தல்கள் திணைக்களம் அறிவித்திருக்கிறது. இச்சூழலில் வட-கிழக்கு மாகாண மக்களும் இத்தேர்தலை எதிர்கொள்ள தலைப்பட்டு உள்ளனர். உள்ளூராட்சி மன்றம் என்பது இலங்கையின் அரசமைப்பின் பிரகாரம் உள்ளூார் மக்களின் அடிப்படையிலான வாழ்வுநிலைகளில் உள்ள தன்மைக்கேற்ப தமது தேவைகளை, தமக்குரிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள சுயாதீனமாகவும் ஆரம்ப ஓர் பயிற்சிப் பட்டறையாகவும் கொண்டு அரசாட்சி செய்யும் முறையே. உள்ளூர் மட்ட ஆட்சி முறையாக உள்ளூராட்சி மன்றங்களும் மாகாண மட்டத்தில் மாகாண சபை ஆட்சி முறையும் நாடுதழுவிய ஆட்சி முறையாக நாடாளுமன்ற ஆட்சி முறையும் நடைமுறையில் காணப்படுகின்றன. ஆனால், நாடாளுமன்ற ஆட்சிமுறையைத் தவிர மற்றைய இரு ஆட்சிமுறை அலகுகளை ஆட்சியாளர்கள் தமது விருப்பு வெறுப்புக்களுக்கேற்பவே நடத்துகின்றனர். நான்கு வருடங்களை ஆட்சிக் காலமாகக் கொண்ட உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிகாலத்தை நிறைவு பெற்ற பின் தேர்தல் நடத்தப்படுவதில்லை. அதேபோல், மாகாண சபைத் தேர்தல்களும் காலம் கடந்தே விடப்பட்டுள்ளன. அண்மைய நீதிமன்றத் தீர்ப்பை அடுத்தே தென்னிலங்கையிலுள்ள ஒரு பிரதேச சபைக்கு தேர்தல் நடத்தப்பட்டது. நீதிமன்ற தலையீடு அதிகரிக்கும் என்ற அச்சத்தின் மத்தியிலேயே உள்ளூராட்ச. மன்றங்களுக்கான தேர்தல் நடத்தப்படுவதாக ஊகிக்கவும் முடியும்.

அதைவிட உள்ளூராட்சி மன்றங்களின் தத்துவம், உள்ளூர் மக்களின் ஜனநாயக விழுமியங்களை சட்ட ஆட்சிப் பொறிமுறையை அம்மக்களின் தலைமைத்துவப் பங்களிப்புக்களுடன் கூடிய பரிபாலனத்தை ஊக்குவிக்கும் தேவையைச் சார்ந்தது. இதனை வளர்த்தெடுக்க – ஜனநாயக பண்பு மாற்றத்தை உறுதிப்படுத்த – ஆட்சியாளர்கள் துணை செய்ய வேண்டும் என்பது அவசியமானது. ஆனால், நாடாளுமன்ற ஆட்சியாளர்கள் உள்ளூராட்சி மன்றங்களை தமது அரசியல் தேவைகளுக்கு – குறிப்பாக உள்ளூராட்சிமன்ற ஆதனங்களையும், வளங்களையும் குறுக்கு வழியில் பெற்றுக்கொள்ள – பயன்படுத்துகின்றனர். உள்ளூராட்சி மன்றங்களின் ஆளுகையைத் தமது பிடிக்குள்அமர்த்தும் வகையில் இச்சபைகளுக்கு உள்ளூராட்சி, மாகாண, பொதுநிர்வாக அமைச்சின் கீழ் நிதி உதவி என்ற போர்வையில் கட்டுப்படுத்தவும் தமது விருப்பத்தை செயற்படுத்த சில சலுகைகளை வழங்கியும் மேலாண்மை செய்ய விழைகின்றனர்.

உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சி முறையானது உள்ளூர் மக்களின் வரிப்பணத்தில் செயற்படுத்தக்கூடிய பொறிமுறை ஒன்றாகும். இது மனங்கொள்ளத்தக்கது. உள்ளூர் வளங்கள், உற்பத்தி, வியாபாரம், சேவை

போன்ற நடவடிக்கைகளால் அதன் மூலம் உள்ளூர் மட்ட வளங்கள் யாவும் அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சியைக் கட்டமைக்கப் போதுமானது. கூடவே சுயத்திலிருந்து தமக்குத் தேவையான வரி வசூலிப்புத் திட்டங்களையும் சேவைகளையும் பெறக்கூடிய வழிகளைக் கண்டடைவதே இதன் ஆட்சிப் பரிபாலன முறை

தொடர்ச்சி ▼

# நடைபெறும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் எடுக்க வேண்டிய நிலைப்பாடு

தொடர்ச்சி▲

யாகும். இதற்கு மாறாக உள்ளூராட்சி மன்றங்களை தமது கட்சி மேலாண்மைக்குள் கொண்டு வரும் கைங்கரியத்தையே தேசிய கட்சிகள் எனச் சொல்லப்படும் ஆட்சியாளர்கள் கைவசப்படுத்த முனைகின்றனர். இது ஆரோக்கியமற்ற நடவடிக்கையாகும். மக்களின் பங்களிப்பு அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு எதிரான போக்காகும். உள்ளூராட்சிமன்றங்களின் ஆளுகை உள்ளூர் மக்களின் ஆளுகையை உறுதிப்படுத்தக் கூடியதாகவும் மக்களின் பங்களிப்பு மூலம் அனைத்து மட்ட சமூகங்களின் பிரதிநிதித்துவ பங்கேற்புடனும் நடத்தப்படவேண்டிய அரசாட்சி முறையாகும். அதுவே வரவேற்கத்தக்கதுமாகும்.

வட கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை இங்கு வாழும் மக்கள் பிரிவினர் அரசாட்சியில் பங்குதாரராகவோ தமக்கான தேவைகளைப் பரிபாலனம் செய்ய அனுமதிக்கப்பட்டவர்களோ அல்லர். எமக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருக்கும் சிலவகை அரசாட்சி அலகுகளைக் கூட தேசிய சிங்கள கட்சிகளின்

மேலாதிக்கத்திற்கு விட்டுவிடுவது முறையானதல்ல. உள்ளூராட்சி மன்றங்கள் என்பவை மத்திய ஆட்சியிலுள்ள அதிகாரங்களை பகிர்ந்தளித்த மற்றுமொரு சிறு வடிவமேயாகும். நேரடியாக இலங்கை அரசமைப்பு ரீதியில் அதிகாரப் பகிர்வு எனக் கூறப்படவில்லையாயினும் உள்ளூராட்சி மன்றங்கள் அதிகாரங்கள் சிலவற்றை கொண்டிருக்கின்றன. இது அரை அல்லது அதற்கு கீழ் வழங்கப்பட்ட அதிகாரப் பகிர்வு முறையாகும். உள்ளூராட்சிமன்றங்களுக்கு மத்திய ஆட்சி அலகால் வழங்கப்பட்ட அதிகாரமானது சட்டம் உபவிதிகள், அதன் கீழ் பரிந்துரைக்கப் படக்கூடிய ஏற்பாடுகள், அதற்கூடாக அமுல்படுத்தக்கூடிய செயற்றிட்டங்கள் யாவும் உள்ளூராட்சி மன்றங்களின்

அதிகாரத்தை பிரதிபலிக்கக் கூடியவை யாகும். அவை மக்களின் அதிகாரம். அவற்றைப் பறித்தெடுக்கவோ

விட்டுக்கொடுக்கவோ முடியாது. அது எமது இறைமை மற்றும் ஜனநாயக பொறுப்பு வாய்ந்த விடயங்களாகும்.

இம்முறை நடைபெறவிருக்கும் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்தையும் கைப்பற்றப் போவதாக சூளுரைத்திருக்கிறது. இன்றைய ஆளும் தரப்பான நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, நாடாளுமன்ற பெரும்பான்மையைத் தக்கவைத்துக் கொண்டே நாடு தழுவிய உள்ளூராட்சி மன்ற ஆளுகையையும் கைப்பற்ற ஆயத்தமாகின்றார். இந்த ஆட்சியின் பலத்திற்கு எந்த விதத்திலும் உள்ளூராட்சி மன்றங்களின் ஆளுகைக்கு அவசியமில்லை. மாறாக ஜனநாயக மறுப்பாகவும் தமிழ் மக்களின் சுயாதீனமான ஆளுகையையும் அழித்தொழிக்கின்ற நடவடிக்கையுமாகும். ஆகவே முற்றிலும் தேசிய மக்கள் சக்தியை புறமொதுக்க வேண்டிய தார்மீகக் கடமை தமிழ் வாக்காளர்களைச் சார்ந்தது. இந்த உள்ளூராட்சி மன்றங்களின் ஆளுகையை வீரியமான, சிறப்பானதாக ஜனநாயகப் பங்கேற்புக்காக தமிழ் மக்களை உற்சாகமூட்ட வேண்டும். மத்திய ஆட்சியாளர்கள் ஜனநாயக சட்டவாட்சி தத்துவங்களை, ஏற்பாடுகளை உருவாக்கிக் கொடுக்கத் துணிய வேண்டும். மாறாக ஆட்சியைப் பிடிப்பது அதன் மூலம் தமிழ் மக்களின் அதிகாரத்தை பறிப்பது, சீரழிப்பது, சிதைப்பது போன்ற வழிகளுக்கே வகை செய்யும். தற்போதைய ஆட்சியாளர்கள் ஒரு சரியான கொள்கை சித்தாந்தங்களால் தமிழ் மக்களிடத்தில் இடம்பிடிக்கவில்லை. புரையோடிப்போன சிங்கள இனவாத குரோத மனப்பான்மை கொண்ட தமிழர் விரோத கருத்தியலையே கட்டிக்காக்கும் அமைப்பாக விளங்குவதால் அவர்கள் நிராகரிக்கப்படவேண்டியவர்களே.

தமிழ்த் தரப்புக்களில் மிதவாத அல்லது தாராளவாத சிந்தனை கொண்ட தமிழரசுக் கட்சி, அண்மையில்

ஆச்சரியகரமாக கூட்டுச் சேர்ந்த தமிழ் காங்



கிரஸ் போன்ற கட்சிகள் உள்ளூராட்சி மன்றங்களின் ஆளுகையை கைப்பற்றுவதற்காகத் தனித் தனியாக போட்டி போடுகின்றன. தமிழ் மக்களின் அவலங்கள், சிதைவுகள் யாவற்றையும் கருத்திற்கொள்ளாமல் தமது சிந்தனைவாத உணர்ச்சிக்கு அமைவாகவே களம் இறங்கியுள்ளனர்.

தனித்துக் களம் காணும் இத்தரப்புக்கள் எல்லா இடங்களிலும் எமது அரசியல் தலைமை என ஏற்க முடியாத தரப்பாகவே விளங்குகின்றன. சமூகத்தில் அதிகாரத்துவ உயர்நிலை சமூக மேலாதிக்க தரப்பினரின் பிரிவாக?விளங்குவதால் சமூக ஒற்றுமை, ஐக்கியம், சகவாழ்வு, சகோதாரத்துவம் யாவும் கேள்விக்குறியாகவே மாறிவிடும். இவர்களால் தலைமைத்துவம் கொடுக்கவோ ஜனநாயக விழுமிய செல்நெறிகள் பேணிப்பாது காக்கப்படவோ முடியாது. மாறாக ஆதிக்க மனோபாவத்தையே பரிசாகப் பெறமுடியும். ஆகவே இத் தரப்பை நாம் ஆதரிக்கவோ ஒத்துழைப்பு வழங்கவோ முடியாதவர்களாகவே இருக்கின்றோம்.

ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணி என்னும் தரப்பு கூட்டுச் சேர்ந்த அணியாயினும் அவர்கள் தமிழரசுக் கட்சியுடன் இணைந்துகொள்ளப்பட முடியாதததால் ஓர் ஏமாற்றத்தின் பழிவாங்கலாகவே கூட்டு அணியை உருவாக்கியுள்ளனர். கொள்கை, சித்தாந்தங்கள் என்று சொல்லக் கூடிய எதுவுமில்லை. பழைய மேற்கோள்கள்,

தொடர்ச்சி▼

# நடைபெறும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் எடுக்க வேண்டிய நிலைப்பாடு

தொடர்ச்சி▲

பிரகடனங்களிலேயே தம்மை வழிவந்தவர்களாக காண்பிக்க முனைகின்றனர். இச்சக்தியும் நம்பகமான உறுதியான தரப்பு இல்லை. பதவி, அந்தஸ்து மூலம் தனிநபர் நிலையை தக்கவைப்பதிலேயே குறியாக உள்ளனர். கொள்கையால் உருவாக்கப்பட்ட கூட்டு அல்ல. தவறவிடப்பட்டவர்களின் கூட்டு. ஆகவே, தமிழ் மக்கள் இந்த அணியினரையும் தமது தெரிவாகக் கொள்ள முடியாது.

மூன்றாவதாக ஒவ்வொரு பிராந்தியத்திலும் மாறுபட்ட தரப்புக்கள் இடம்பெறுகின்றன. டக்ளஸ், பிள்ளையான், கருணா, வியாழேந்திரன் கூட்டு, போன்ற தரப்புக்கள் வெளிப்படையாக சிங்கள தேசிய ஆட்சியாளர்களுடன் பயணித்தவர்கள். ஆனால், இதுவரை கொள்கை ரீதியில் வேறுபட்டனவாகவே முரண்பட்டதரப்புக்களாகவே இருக்கின்றனர். தமக்கு வாய்ப்பு, வசதிகள் கிடைத்தால் எவருடனும் சேர்ந்துகொள்ள முடியும் என்ற நிலைப்பாடுகள் கொண்ட தரப்பு வகைகள். அதனால் நம்பகமான சக்திகள் அல்ல. நிராகரிக்கப்பட வேண்டிய குழுக்கள்.

மிக முக்கியத்துவம் வாய்ந்த சுயேச்சைக் குழுக்கள், பொதுவாகப் பார்வைக்கு சுயாதீனத் தன்மை கொண்டிருந்தாலும் உண்மையில் சுயாதீனமான, சுதந்திரமான, சமூக அக்கறை கொண்ட, சமூகத்தில் ஒடுக்கப்பட்ட பிரிவுகள், புறமொதுக்கப்பட்ட நபர்கள், செயற்பாட்டாளர்கள், கட்சியின் பினாமிகள் யாவரையும் தரப்புக்களாகக் கொண்ட மிகப்பெரிய உதிரியான தரப்புக்களாகும். பொதுவாகச் சொல்ல முடியாவிட்டாலும் குறிப்பிட்ட இடங்களில் போட்டியிடுகின்ற சுயேச்சைக் குழுக்கள், சுயாதீனத் தன்மை கொண்டவை என்பதும் சமூகப் பிரதிநிதித்துவத்தை அதாவது மாற்றுத் தெரிவாக முன்னிறுத்தி களமிறங்கிய தரப்புக்கள் காணப்பட வாய்ப்பு உண்டு.

விதிவிலக்காக சில அணிகள் சிங்கள முற்போக்கு, இடதுசாரி தரப்புக்களுடன் இணைந்தும் போட்டியிடவும் கூடும். இவ்விதமான சந்தர்ப்பங்களில் தமிழ் மக்கள் தத்தமது பிராந்தியத்தின் உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் பொருத்தமான – சேவையாற்றக்கூடிய – சிரத்தையுள்ள – ஆளுமையான – வேட்பாளர்களையும் சமூகம் சார்ந்த பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுப்பதே உசிதமானது.

பொதுவாகவே தமிழ் சமூகத்தின் கூட்டுமொத்த இறைமை ரீதியான தீர்மானத்திற்கேற்ப பொறுப்பு வகிக்கக்கூடிய, தலைமை தாங்கக்கூடிய சக்திகளோ, அரசியல் சிந்தனைவாத சக்திகளோ தற்போது களத்திலில்லை. ஓரளவு பொதுக் கருத்தியல் தளத்தை கொண்ட சிவில் சமூக சக்திகளும் கூட்டாக நின்று வலியுறுத்தக்கூடிய சக்தியும் இப்போது இல்லை. ஆதலால் கட்சி மேலாதிக்க போக்குகளே தமிழ்த் தரப்புக்களில் மிகுதியாகக் காணப்படுகிறது. மக்களின் நலன்களிலிருந்து, மக்களின் இறைமையைப் பாதுகாக்க வேண்டும், உரிய சேவைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும், உள்ளூர் தலைமைத்துவத்தை உள்ளூராட்சி மன்றக் கட்டமைப்புக்குள் உருவாக்கி மக்களின் ஆதனத்தை, வளத்தைப் பாதுகாக்க வேண்டும், பேண வேண்டும் என்று கரிசனைப்படாமல் தமது கட்சி வெற்றி பெற வேண்டும், அதன் மூலம் அடிவருடித் தன்மைகளை தாராளவாதக் கருத்தியல் மேலாதிக்கச் சக்திகளும் இசைந்து போகக் கூடிய வழிவகைகளை தேடுவதையே தமது குறிக்கோளாகக் கொண்ட சக்திகளின் போக்குகளுக்கு எதிராகவே மக்கள் தீர்மானம் எடுக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

மக்களாகிய நாம் போலி தேசியவாத கருத்தியலுக்கு எதிராகவும், சிங்கள, பௌத்த தேசியவாதக் கருத்தியலுக்கெதிராகவும் இத்தேர்தல்களில் போட்டியிடுகின்ற தரப்புக்களைப் புறமொதுக்க வேண்டும். தமிழ் மக்களின் இறைமை, ஜனநாயகம், சமூக நீதி, மக்கள் நலன் ஆகியவற்றிற்காக முன்னிற்கும் வேட்பாளர்களை இனங்கண்டு அவர்களையே தெரிவு செய்ய வேண்டும். கட்சி, அணிகளின் அரசியல் அலைகளுக்கு ஆட்படாமல் பொருள், பணத்திற்கு விலைபோகாமல் சரியான வேட்பாளர்களை தெரிவு செய்து குறைந்தபட்ச ஜனநாயகக் கடமையைப் பேண நாம் தலைப்படுவோம்.





இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

4





# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

நாட்டின் ஆணிவேரான இனப் பிரச்சினை இங்கு இல்லாத ஏதோ ஒன்றாகவும், அது ஒத்தடம் தரப்பட வேண்டிய புண்ணாகவும் மட்டுமே அரச அதிகாரிகளின் நிர்வாக முறைமைகளில் பார்க்கப்படுகின்றது. விருப்பு இருந்தாலும் அநுராவும் அவரது அரசியல் சகபாடிகளும் அப்படி, தமிழ், முஸ்லிம் மற்றும் மற்றைய சிறுபான்மையினருக்கு தலைமைத்துவம் தந்து, அவர்களை இனங்கொண்டிருக்கும் மனப்பாங்குகளில் இருந்து வெளிக்கொணரத் திட்டங்களை சிங்கள மக்களுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டும். மேடைப் பேச்சுக்களையும் சுலோகங்களையும் தவிர அணுகுமுறை ஒன்று இல்லையானால் அண்டை நாடுகளான இந்தியா, மியான்மார், சீனா, வங்காள தேசம் போன்றவை கையாளும் முறைகளையே இங்கும் அதிகாரத்தின் கீழ் ஆணித்தரமாக அமுல்படுத்தும் எண்ணங்கள் எழலாம்.

இந்தியப் பிரதமர் மோடியின் இலங்கை வருகைக்கு முன் பத்திரிகையாளர்களிடையே கருத்து தெரிவித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்கா "மாகாண சபைகள் குறித்து இந்தியா எமக்குக் கூற வேண்டியது இல்லை. அது உள்நாட்டுப் பிரச்சினை. ஆகையினால் அதனை இந்தியாவுடன் மோடி இம்முறை வரும்பொழுது கலந்து பேச வேண்டிய தேவை இருக்காது" – என அறிவித்தார்.

அத்தோடு, உள்ளூராட்சித் தேர்தலுடன் ஆறு மாதத்திற்குள் மூன்று தேர்தல்கள் நடத்தப்பட்டமையால் மாகாண சபை தேர்தல்கள் இந்த வருடம் நடத்தப்பட மாட்டா என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ செய்தியாளருக்குத் தெரிவித்துள்ளார்.

1987 இல் தமிழர் அபிலாசைகளுக்கு ஆதரவளித்த பிரச்சினைகள் ஊடாக ஏற்படுத்திய ஒப்பந்தத்தின் மூலமாகத் தனது பாதுகாப்பையும் இந்தியா வலுப்படுத்தியது. பிரதமர் மோடி இம்முறை வருகை தரும் பொழுது ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தம் இலங்கையுடனான நேரடி பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டது.

சிங்கள மக்களிடையே இருக்கும் மனப்பாங்கு

தொடர்ச்சி ▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

'மகா வம்சம்' என்ற இதிகாச காப்பியத்தின் அடிப்படையில் எழுந்தது. இது ஒரு பௌத்த துறவியால் நான்காம் நூற்றாண்டில் எழுதி விதைக்கப்பட்டது. அவர்களது பயமும் இந்தியாவுக்கு எதிரான எதிர்ப்பு உணர்வுகளும் 2,500 வருட வரலாற்றில் தென்னிந்தியாவிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சேர, சோழ, பாண்டியர் படையெடுப்புக்களின் அழிவிலும், தமிழ்நாட்டில் பௌத்த மதம் நிலைகொள்ளாததின் ஆதங்கங்களிலும் எழுந்தவை. அவர்களது பயம் உண்மையா என்பதை விவாதிப்பதிலும் அர்த்தம் இல்லை. ஆனால் உணர்வுகள் நிஜமானவை.

தமிழ் மக்களோ, தாங்கள் தங்களது தனிப்பட்ட இறைமை உள்ள அரசுகளைக் கொண்டிருந்தவர்கள், அப்படியான முடியரசுகள் எப்பொழுதும்



டாக்டர் நொயல் நடேசன்

சிங்கள அரசுகளால் மட்டுமல்லாமல், பின்னால் வந்த ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன என்ற மனப்பாங்கை வளர்த்துள்ளார்கள். போர்த்துக்கேயர் 1619 இல் தமிழ் மன்னனை வென்று தங்களது ஆதிக்கத்தை ஏற்படுத்திய போது, தமிழரின் அரசுகள் கொண்டிருந்த அதிகாரங்கள் வேறானவை என கண்டறிந்து அதைப் பின்பற்றினர். அதன் பின் தொடர்ந்த ஒல்லாந்தரும் ஆங்கிலேயர்களும் அப்படியே நடத்தி, பின்னர் நிர்வாக வசதிக்காக ஆங்கிலேயர்கள் நிறுவிய கோல்புரூக் ஆணைக்குழுவின் பரிந்துரைகளினாலேயே சிங்கள அரசினதும் தமிழ் அரசுகளினதும் பகுதிகள் இணைக்கப்பட்டன என ஆதாரப்படுத்துகிறார்கள். தென்னிந்தியாவின் சேர, சோழ, பாண்டியர்களை தங்களவர்களாகவும், தமிழகத்தைத் தொப்புள் கொடி உறவாகவும் தமிழர்கள் பார்க்கிறார்கள். இவற்றை விவாதிப்பதில் அர்த்தம் இல்லை. ஆனால் உணர்வுகள் நிஜமானவை.

நிகழ்கால அரசியலில் ஐம்பது வருடங்களுக்குப் பின்னால் இனப்பிரச்சினையை அணுகுவதற்கான நல்லெண்ணங்களும் சந்தர்ப்பமும் எல்லா இனங்களுக்கும் வாய்க்கின்றன – தேர்தல் வாக்குறுதிகளால்.

டாக்டர் நடேசன் இலங்கையிலும் ஆஸ்திரேலியாவிலும் மிருக வைத்தியராகப் பணிபுரிந்தவர். ஆயுதப் போராட்ட காலங்களில் இந்தியாவில் தஞ்சமடைந்து, போராளிகளுக்கும் அகதிகளுக்கும் மருத்துவ உதவிகள் தருவதற்கான ஏற்பாடுகளில் பணியாற்றியவர். உணர்ச்சிகளின் தாக்கங்கள் அரசியலில் ஏற்படுத்திய விளைவுகளை அனுபவ ரீதியாகப் பட்டறிந்தவர். ஈஸ்டர் தாக்குதலின் பின் 'அரசியலும் நாடகங்களும்' என்ற தலைப்பில் பதிவு ஒன்றை எழுதியிருந்தார். இலங்கை அரசியலில் காலங்காலமாக – முக்கியமாக 1970 ஆம் ஆண்டு பிற்பகுதியில் இருந்து – இளைஞர்கள் உணர்ச்சிகளுக்கு தமிழ், சிங்கள அரசியல்வாதிகளால் ஆள்படுத்தப்பட்டமை போல, அதே உணர்ச்சிகள் முஸ்லிம் பகுதிகளால் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ் மக்கள் இருபது வருட காலத்தில் சந்தித்த அழிவுகளை வெகு சீக்கிரத்தில் முஸ்லிம் மக்கள் அதன் அரைவாசி காலத்திலேயே சந்திக்கலாம் என அவர் கருதினார்.

எந்த விடிவும் இன்றி இவை ஏன் நடந்தன என்ற அரசியல் சூதாட்டங்கள் அறியப்படாமல், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நடந்து ஆறு வருடங்கள் ஓடிவிட்டன. முஸ்லிம் மக்கள் பற்றிய பீதியும் தங்களது பாதுகாப்புக்காக சிங்கள மக்களுக்குள் நிலை கொண்டு விட்டது.

நடேசனது கருத்தில் மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள் எல்லோரும் சுரண்டும் பகுதி உணர்ச்சியே. அது மூளையின் டெம்போரல் (Temporal) பகுதி. இந்த உணர்ச்சியை உருவாக்கி மனிதனின் பாதுகாப்புக்காக அது துடிக்கிறது. அந்த உணர்ச்சிகளை பாவித்து, கேப்பை மாட்டின் மடியில் அமுதசுரபியாக பால் கறக்கிறார்கள் – அரசியல்வாதிகளும் மதவாதிகளும்.

நான் முன்னர் குறிப்பிட்ட 'விலங்குகள் பண்ணை' நாவலின் ஆசிரியர் ஜோர்ஜ் ஓர்வெல்லின் கதைகளும் நாடகங்களும் உணர்ச்சிகளைத் தூண்டுவதை விடுத்து மூளையின் முன் பகுதியான லோபோவினால் (Frontal Lobe) அறிவுபூர்வமாக சிந்திக்க வைக்கத் தூண்டினார். தற்பொழுது மக்களுக்கு தேவையானது உணர்ச்சி வசப்படாது சிந்திக்கும் அறிவுபூர்வமான அரசியல் மற்றும் நேர்மையான அரசியல்வாதிகளே என அவர் குறிப்பிடுகிறார்.

மூன்று இனங்களும் இனவாதத்தால் கூர்மையாக்கப்படும் போது யாருக்கும் நன்மை இல்லை. பாதிப்புகள் தொடரும். 75 வீதமான சிங்கள – பௌத்த மக்களை கொண்ட நாட்டில் நல்லிணக்கத்தை இனங்களின் பரஸ்பர புரிந்துணர்வால்தான் உருவாக்க முடியும் எனவும், மூன்றாம் தரப்பு

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

**தொடர்ச்சி▲**

ஒன்று இலங்கை மக்கள் மீது ஒரு தீர்வை திணிக்க முடியாது, அது சாத்தியமற்றது, வேண்டுமானால் உட்பகைகளை ஊக்குவித்து, நாட்டை ஒரு சோமாலியா, யேமன் நாடுகளைப் போலவோ ஆக்கலாம். அனுபவங்களின் அடிப்படைகளில் அதுவே யதார்த்தமாகவும் படுகிறது.

அதே அனுபவங்களில், தேசிய மக்கள் சக்தி பரப்புரை செய்த – செய்கின்ற – 'நல்லிணக்கம்', 'சமதர்மம்', 'சம உரிமை', 'இனப்பிரச்சினையற்ற நாடு' என்பவை எல்லாம் அரசியலில் வெற்றி பெறுவதற்கு எல்லா பெரும்பான்மை கட்சிகளும் பாவிக்கும் உளச் சுத்தியற்ற வார்த்தை ஜாலங்களா அன்றி, அவர்கள் ஏற்படுத்த விரும்பும் சித்தாந்தங்களா என்ற விடயத்தில் தெளிவும் நம்பிககையும் பிறக்க வேண்டும்.

1983 கலவர காலங்களில் கொழும்பு நகரின் வீதியில் தமிழ் இளைஞன் ஒருவன் நிர்வாணமாக்கப்பட்டு பெட்ரோல் ஊற்றி எரிக்கப்படும் பொழுது, அவரைச் சுற்றி இருந்த – அதற்குப் பொறுப்பான – சிங்கள இளைஞர்கள் பைலா போடுவதை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். தமிழர்கள் என்பதற்காக அதை போல் அவர்கள் பட்ட வன்முறைகளின் வடுக்கள் அதிகம். அவர்களின் தன்மானம் இதனால் பாதிப்பு அடைந்து நொந்து வாடியுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் கூட 'நல்லெண்ணம்', 'சமதர்மம்', 'சம உரிமைகள்' பற்றிப் பேசுகின்றார்களே ஒழிய, தமிழ் மக்கள் தங்களது தன்மானத்துடன் வாழ சிங்கள மக்களுக்குத் தலைமை தந்து வழி வகுப்போம் என்று பேசவில்லை.

அதேசமயம் இவ்வளவு காலங்களின் பின் வெளிப்படையாக இந்தச் செய்திகளைத் தரும் அரசுடன் தமிழ் மக்கள் எந்த அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதும் முக்கியம். ஆனால் ஜே.வி.பி. இயக்கத்திற்கும் அரசியல் சித்தாந்தம் உண்டு. அவர்கள் ஆயுதங்கள் தாங்கி அரசுக்கு எதிரான போராட்டங்களைத் தொடங்கிய காலங்களில் இருந்து, இடதுசாரி தத்துவங்கள் இடையே ஏற்பட்ட கூர்மையான வாத பிரதிவாதங்கள், இனப் பிரச்சினைக்கான வழிவகைகளுக்கு எப்படிப் பாதிப்பினை தந்தன என்பனவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும். அந்தப் பாதைகளில் தமிழ இளைஞர்கள் ஆயுதப் போராட்டங்களை ஆரம்பித்து. அவை எவ்வகையான தாக்கங்களை தந்தன என்பதும் முக்கியமானது. இந்தப் புதிய அரசியல் எழுச்சியால் இந்த நாள்களில் இளைஞர்கள் உணர்ச்சியால் உந்தப்பட்டு, அறிவு பூர்வமாகப் பின் தள்ளப்படுகிறார்களா என்பதையும் சிந்திக்க வேண்டும்.

(தொடரும்)



# ஜனாதிபதி வவுனியாவிற்கு நாளை மறுதினம் விஜயம்

(கி.வசந்தன்)

நாளை மறுதினம் 26 ஆம் திகத ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கா வவுனியாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் "வெற்றி நமதே – ஊர் எமதே" என்னும் தொனிப் பொருளில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில், வவுனியா மாவட்டத்தில் உள்ள மாநகரசபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை என்பவற்றில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து வவுனியா நகரசபை மைதானதில் 26 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் கூட்டத்திற்கே ஜனாதிபதி வருகை தரவுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.04.2025



## மேஷம்

கடின முயற்சிகளின் மூலம் வெற்றி கிடைக்கும். உங்கள் செயல்களில் வளர்ச்சி வெற விரும்பினால் மனதை ஒருமுகப் படுத்தி செயலாற்ற வேண்டும்.

மனச்சோர்வு ஏற்படும் சூழ்நிலைகள் உருவாகலாம். உங்கள் கீழ் பணிபுரிவோரிடம் நல்ல முறையில் பழகுங்கள்.

உறவில் வரும் பிரச்சினைகளை நல்ல முறையில் கையாள அமைதியாக இருந்து ஆசுவாசப்படுத்திக் கொள்ளுங்கள். உணர்ச்சி வசப்படுதலை தடுத்தால் நீங்கள் நல்ல முறையில் உணர்வீர்கள்.

வரவும் செலவும் இணைந்தே காணப்படும். ஆரோக்கியம் சம்பந்தமான செலவுகள் கவலையை அளிக்கும்.

முதுகு வலி மற்றும் செரிமானக் கோளாறுகளால் அவதிப்பட நேரிடலாம்.



## ரிஷபம்

உங்களுக்கான வளர்ச்சியில் நீங்கள் கவனம் செலுத்துவீர்கள். மற்றவர்களின் ஆதரவை நாடுவதை விட உங்கள் செயல் திறன் மற்றும் திறமையை நம்பி செயல்பட வேண்டும்.

தொழிலில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். பொறுமையுடன் இருக்க வேண்டும். உங்கள் நேர்மை உங்களுக்கு வெகுமதியை பெற்றுத் தரும்.

தொடர்பாடலில் ஏற்படும் குறைபாடுகள் உறவில் நல்லிணக்கத்தை தடுக்கும். உறவை வலுப்படுத்த குடும்பத்துடன் அதிக நேரத்தை செலவிடுங்கள்.

நிதியைப் பொறுத்தவரை நல்ல நேரத்துக்காக காத்திருக்க வேண்டும். செலவு செய்வதைவிட சேமிப்பது நல்லது.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.



## மிதுனம்

நீங்கள்செய்யும் செயல்களின் விளைவுகள் உங்களுக்கு அனுகூலமாக இருக்க நீங்கள் விரைந்து செயலாற்ற வேண்டும். உங்களிடம் இருக்கும் புத்தி சாலித்தனத்தின் மூலம் எதை செய்யலாம் எதை செய்யக் கூடாது என்று உணர முடியும்.

ஒப்புக் கொண்ட பணிகளை முடித்துக் கொடுக்க வேண்டும் என்ற பதற்றம் காணப்படும். சக பணியாளர்களிடம் நல்லுறவைப் பேணுவது பயனளிக்கும்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாய் உங்கள் துணையுடன் மோதல் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். நட்பான அணுகுமுறையும் விஷயங்களை லேசாக எடுத்துக் கொள்வதும் நன்மை தரும்.

நிதிநிலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும்.



## கடகம்

உங்கள் வாய்ப்புகளை வளர்த்துக் கொள்ள உகந்த நாள். இன்று பயணங்கள் அதிகம் காணப்படும். அது உங்களுக்கு பயனளிக்கும்.

பணிச் சூழல் இன்று சிறப்பாக காணப்படும். நீங்கள் ஆற்றும் பணிக்காக நற்பெயரை எடுப்பீர்கள்.

குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். ஒவ்வொரு மணித்துளிகளையும் அனுபவித்து மகிழ்வீர்கள்.

இன்று பணத்தை சேமிக்கவும் நிதிநிலையை மேம்படுத்தவும் உகந்த நாள். பணியின் மூலம் உங்களுக்கு நன்மைகள் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நல்ல தேக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.



## சிம்மம்


நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் காணப்படும். சிறந்த முறையில் திட்டமிட அமைதியாக செயலாற்றுங்கள்.

மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சகபணியாளர்கள் உங்களை பாராட்டுவார்கள்.

உறவில் நல்லிணக்கம் காணப்படும். பெரியவர்களுடனான உறவில் நல்ல ஒத்துழைப்பு பராமரிக்கப்படும்.

நிதிநிலையில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் பணவரவை மேம்படுத்துவதற்கான நல்ல வாய்ப்புகள் கிடைக்கும்.

இன்று மகிழ்ச்சியாக இருப்பதன் காரணமாக ஆரோக்கியம் சிறந்த முறையில் காணப்படும்.



## கன்னி

இசை கேட்பதும் திரைப்படங்களைப் பார்ப்பதும் உங்களை நிதானப் படுத்தும். உங்கள் செயல்களில் நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

பணி வளர்ச்சி மந்தமாக இருக்கும். மேலதிகாரியிடம் உங்கள் மதிப்பை நிரூபிக்க கடினமாக உழைக்க வேண்டும். இன்று ஓய்வின்றி வேலையில் மும்மரமாக இருப்பீர்கள்.

பெரியவர்களுடன் உறவாடும் போது கவனமாக இருக்க வேண்டும். குடும்ப அங்கத்தினர்களிடம் நட்பாக இருக்க வேண்டும்.

நிதிநிலையில் முன்னேற்றம் குறைந்து காணப்படும். இன்று பணம் செலவு செய்வதை தடுப்பது நல்லது.

சூடு சம்பந்தமான பிரச்சினைகளில் முன்னெச்சரிக்கையாக இருக்கவும். தலைவலி ஏற்படலாம்.



## துலாம்

உங்களுக்கான வளர்ச்சியில் நீங்கள் கவனம் செலுத்துவீர்கள். மற்றவர்களின் ஆதரவை நாடுவதை விட உங்கள் செயல்திறன் மற்றும் திறமையை நம்பி செயல்பட வேண்டும்.

வேலையில் பதற்றம் காணப்படும். உங்கள் கடமைகளை சரியான முறையில் செய்வதற்கு மிகவும் கவனமாக பணிகளைக் கையாள வேண்டும்.

குடும்ப உறவில் ஒற்றுமை குறைந்து காணப்படும். சிறிய அளவில் அனுசரித்துப் போவதன் மூலம் சம நிலையை பராமரிக்கலாம்.

நிதிநிலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்காதீர்கள்.

நல்ல ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டுமெனில் பதட்டத்தை கைவிடுங்கள். தியானம் மேற்கொள்வதன் மூலம் சிறப்பாக உணர்வீர்கள்.



## விருச்சிகம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். முக்கியமான முடிவுகளை எடுக்க இன்றைய தினத்தை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

ஒப்புக்கொண்ட பணிகளை முடித்துக் கொடுக்க வேண்டும் என்ற பதட்டம் காணப்படும். சக பணியாளர்களிடம் நல்லுறவைப் பேணுவது பயனளிக்கும்.

உறவுமுறையைப் பொறுத்தவரை செயல்பாடுகள் காணப்படாது. பரஸ்பர நல்லிணக்கத்தை பராமரிக்க அனுசரித்துப் போவது மிகவும் முக்கியம்.

நிதிநிலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். நிதிநிலையைப் பாதுகாக்க திட்டமிடல் அவசியம்.

மனஅழுத்தமும் பதற்றமும் செரிமானக் கோளாறுகளை ஏற்படுத்தும். ஓய்வு மற்றும் தியானத்துக்கென் சிறிது நேரத்தை ஒதுக்குங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.04.2025




உறவுகளில் சிக்கல் வராமல் இருப்பதற்கு நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும். புதிய உறவுகள் ஏற்பட சாத்தியம் உள்ளது. மிகுந்த பொறுமை அவசியம்.

சிறந்த நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். பணியை எளிதாக முடிப்பீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

பொதுவாக நல்ல உறவுமுறை காணப்படுகின்றது. நீங்கள் உங்கள் குழந்தைகளின் வளர்ச்சியைக் காண்பீர்கள்.

நிதி வளர்ச்சி நன்கு காணப்படும். ஆன்மீக காரியங்களுக்காக இன்று பணம் செலவு செய்வீர்கள்.

இன்று திடமாகவும் ஆரோக்கியமாகவும் காணப்படுவீர்கள்.




ஒரு துடிப்பான நாள் உங்கள் முன் இருக்கிறது. உங்கள் சுய வளர்ச்சிக்காக எடுக்கும் அனைத்து முயற்சிகளும் உங்களுக்கு வெற்றியைப் பெற்றுத் தரும்.

சேவை சார்ந்த ஈடுபாடு காரணமாக பணி மற்றும் பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக காணப்படும். பணியில் தவறுகள் நேராவண்ணம் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

சாதகமான உறவிற்கு இந்த நாள் ஏற்றதாக இல்லை. உங்கள் நேர்மறையான அணுகுமுறை குறிப்பிடத்தக்க மாறுபாடுகளை கொண்டு வரும்.

செலவினங்கள் அதிகமாகக் காணப்படும். தேவையற்ற செலவுகளைக் குறைக்கவும். எதிர்காலத்திற்காக சிறிது சேமிக்கவும்.




வெளியிடங்களுக்குச் செல்வது சிறப்பான உணர்வைத் தரும். உங்கள் செயல்களில் உணர்ச்சி பூர்வமாக இருப்பதைவிட யதார்த்தமாக இருப்பது அவசியம். இன்று நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

மனஅழுத்தம் காரணமாக கவனக் குறைபாடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

உறவில் நட்பான அணுகுமுறையைக் கையாள்வது உங்களுக்கு நல்லது.

நீங்கள் எதிர்பார்த்த அளவுக்கு நிதி வளர்ச்சி இருக்காது. ஆரோக்கியம் சம்பந்தமான செலவுகள் காணப்படுகின்ளது.

பதற்றமும் பாதுகாப்பற்ற உணர்வும் உங்கள் ஆரோக்கியத்தை கெடுக்கும்.




இன்று நீங்கள் மகிழ்ச்சியை அனுபவிக்கும் நாள். உறுதியுடன் இருந்தால் வெற்றி கிடைக்கும்.

வேலையில் அதிக பொறுப்புகளை சுமக்க வேண்டியிருக்கும். உங்கள் வேலையில் இன்னும் கூடுதலாக ஈடுபட முயலுங்கள். உங்கள் ஆர்வத்தை அது மேம்படுத்தும்.

உறவில் நெறி முறைகளைப் பின்பற்றுவீர்கள். உடன்பிறந்தோர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

இன்று நிதிநிலைமை நன்றாக உள்ளது. பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று நிலையான ஆரோக்கியம் காணப்படும். உங்கள் தைரியம் உங்களை நலமாக வைத்திருக்கும்.

# தமிழ்த் தேசிய உணர்வில் இருந்து தமிழ் மக்கள் விலகவில்லை என்பதை நிரூபிக்கும் தேர்தல் இது!

## அதை உறுதிப்படுத்த அழைக்கின்றார் சித்தார்த்தன்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசிய உணர்வில் இருந்து தமிழ் மக்கள் இன்னமும் விலகிச் செல்லவில்லை என்பதை இந்தத் தேர்தலில் நிரூபிக்க வேண்டியது மிகவும் அவசியமானது.

– இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

யாழில் நேற்று நடாத்திய ஊடக சந்திப்பின் போது தேர்தல் நிலைமைகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே வர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பது இம்முறை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாக பார்க்கப்படுகிறது. குறிப்பாக எனது தந்தையார் தவிசாளராக இருந்த முன்னைய காலங்களில் எல்லாம் இது ஓர் உள்ளூர் விடயமாகவே பார்க்கப்பட்டது. ஆனால் இப்போது – அதுவும் இம்முறை தேர்தல் – மிக முக்கியமான அரசியல் தேர்தலாக



மாறியுள்ளது.

அதுவும் இந்த தேர்தல் தேசிய ரீதியாக பார்ககப்படுகிறது. தேசியக் கட்சிகள் தென்னிலங்கையில் இருந்து இங்கு வந்து மிகக் கடுமையான போட்டியை ஏற்படுத்துவதைப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. உண்மையில் இது ஆரோக்கியமான விடயமல்ல.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பன்மையை ஜே.வி.பி. வைத்துள்ளது. அதில் தமிழ் மக்களும் அவர்களுக்கு ஆதரவை வழங்கி மிகப் பெரிய தவறை இழைத்திருக்கிறார்கள். அந்த தவறை இப்போது அவர்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள்.

இப்போது நாங்கள் பலருடனும் கதைக்கிற போது இவை எல்லாம் நன்றாகத் தெரிகின்றன. அதிலும் ஜே.வி.பி. நடந்து கொள்ளும் விடயம் அந்த வெற்றியை பாவிக்கிற விடயம். அதிலும் தமிழ் மக்கள் தம்முடன் முழுமையாக நிற்கிறார்கள் என சர்வதேசத்திற்கு காட்டும் செயற்பாடுகள் என்பவற்றை முழுமையாக மாற்ற வேண்டும் என்ற எண்ணப்பாட்டிலேயே எமது மக்கள் இப்போது இருக்கிறார்கள்.

ஆனாலும் பிரசாரங்கில் நாம் பார்க்கின்ற போது பெருந் தொகையான தமிழ் மக்கள் ஜே.வி.பியை ஆதரிக்கின்ற நிலை உள்ளது.

எனவே தமிழ் மக்கள் ஒரு தமிழ்க் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்பது தான் இன்றிருக்க கூடிய அவசியமான நிலைமை. தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத்தை விட்டுச் செல்லவில்லை என்பதை ஆணித்தரமாக நிரூபிக்க வேண்டும்.

தமிழ் மக்கள் தமிழ் தேசிய உணர்வில் இருந்து இன்னமும் விலகவில்லை என்பதை தேர்தலில் நிரூபிக்க வேண்டிய தேவை உள்ளது. அதை நீங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

– என்றார்.